மாலை : 50 மணி : 10 அக்டோபர் 2008 விலை ரூ.10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு





# அருள்மிகு நரசிம்ம சுவாமி திருக்கோயில்
# நாமக்கல் நகர்.

## திருப்பணிக்கு நன்கொடையாளர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் நகரில் உள்ள அருள்மிகு நரசிம்ம சுவாமி திருக்கோயிலின் உபசன்னதியான அருள்மிகு ஆஞ்சநேயர் சன்னதியின் கும்பாபிஷேகம் 24.10.1996ல் நடைபெற்றது. கும்பாபிஷேகம் நடைபெற்று 12 ஆண்டுகள் முடிய உள்ள நிலையில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் 20.4.2008 அன்று திருப்பணி துவக்க விழா நடைபெற்று திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. ஸ்ரீ ஆஞ்சநேயர் சுவாமி சன்னதியின் கும்பாபிஷேக திருப்பணிக்கு நன்கொடையாளர்கள் வரவேற்கப்படுகின்றனர். அருள்மிகு ஆஞ்சநேயர் கும்பாபிஷேக திருப்பணிக்கு தாராளமாக நன்கொடை வழங்கி ஸ்ரீ ஆஞ்சநேயரின் அருளுக்கு பாத்திரராகுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

### சிறப்பு நிகழ்ச்சி

**1. வெள்ளிக்கவசம்**

அருள்மிகு ஆஞ்சநேயர் சுவாமிக்கு புதியதாக வெள்ளிக்கவசம் செய்து சாத்துப்படி செய்யப்பட்டு வருகிறது. விரும்பும் பக்தர்கள் சாத்துப்படி கட்டணமாக ரூ.500 செலுத்தி ஸ்ரீ ஆஞ்சநேயரை வெள்ளி கவசத்துடன் தரிசித்து அவர் அருளைப் பெறுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

**2. ஸ்ரீ ஆஞ்சநேயருக்கு தங்கரதம்**

ஸ்ரீ ஆஞ்சநேயர் சுவாமிக்கு புதியதாக தங்கரதம் செய்யப்பட்டு 20.4.2008 முதல் புறப்பாடு நடைபெற்று வருகிறது. பக்தர்கள் தங்களின் கோரிக்கைகள் நிறைவேற தங்கரத புறப்பாட்டுக் கட்டணமாக ரூ. 1500 செலுத்தி தங்கரத புறப்பாடு செய்து ஸ்ரீ ஆஞ்சநேயரின் அருளுக்கு பாத்திரராகுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

**3. அருள்மிகு அரங்கநாதர் சுவாமி வெள்ளிக்கவசம் புதியதாக செய்தல்**

அருள்மிகு அரங்கநாதர் சுவாமிக்கு 80 கிலோ செலவில் புதியதாக வெள்ளிக்கவசம் செய்ய இருப்பதால் பக்தர்கள் தங்களால் இயன்ற நன்கொடைகளை வெள்ளியாகவோ, ரொக்கப்பணமாகவோ திருக்கோயில் அலுவலகத்தில் (அலுவலகம் ஆஞ்சநேயர் சன்னதியில் உள்ளது) செலுத்தி உரிய இரசீது பெற்று அருள்மிகு அரங்கநாதரின் அருளுக்கு பாத்திரராகுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.


தொடர்பு முகவரி :
**செயல் அலுவலர்**
அருள்மிகு நரசிம்மசுவாமி திருக்கோயில்
நாமக்கல் - 637001

**பொ. மோகன், பி,ஏ.,**
செயல் அலுவலர்

**பி. மணிராஜா (எ) சுப்பிரமணியம்**
தலைவர், அறங்காவலர் குழு

அறங்காவலர்கள்

எம்.எஸ்.ஆர். முருகேசன்
பி. இராமநாதன்
வீ. இராதாகிருஷ்ணன்
சங்கீதா ராம்குமார்




திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2039 - புரட்டாசி மாதம்
மாலை : 50 மணி : 10 அக்டோபர் 2008


## அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம்.

அழகு முருகன் சிவபெருமானின் நெற்றிக் கனலில் தோன்றி, புனலில் வளர்ந்து, வானில் விளையாடி, அசுரர்கிளையை வாட்டி, தேவர்களைச் சிறை மீட்டு மண்ணிற்கு வாழ்வளித்த மாதம் ஐப்பசி மாதமாகும். இம்மாதத்து வளர்பிறை சஷ்டியை மகாகந்தர் சஷ்டியென்று கொண்டாடுகிறோம். சஷ்டியன்று விரதமிருந்தால் வம்சத்தை வளரச் செய்யும் நல்ல பிள்ளை தோன்றுவார்கள் என்பர். இதுவே 'சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்' என மருவிவிட்டது. இத்தகு சிறப்பு மிக்க மகா கந்தர் சஷ்டியைப் போற்றும் வகையில் அன்பர்களுக்கு ஞானாசிரியனாக வீற்றிருக்கும் சுவாமிமலை அறுமுகப் பெருமானை முகப்போவியமாகக் கொண்டு இந்த மாத இதழ் மலர்கிறது.

இந்திரன், தேர் வடிவமான ஆலயத்தில் சிவபெருமானை அமர்த்தி வழிபட்ட கடம்பூர் ஆலயத்தை "கடம்பூர் மேவிய விடங்கன்" எனும் தலைப்பில் தில்லை சிவத்திரு அருணாசலம் அவர்கள் காட்டுகிறார்கள். தொடர்வது திருஞானசம்பந்தப் பெருமானின் பாடல்களில் இலக்கிய நுணுக்கங்களை ஆராயும் தமிழாகரர் திரு.தெ. முருகசாமி அவர்களின் கட்டுரையாகும்.

திருக்கோயில்களின் படிப்படியான வளர்ச்சி நிலைகளை சங்காலம் தொட்டு இக்காலம் வரை இலக்கியநோக்கில் காட்டுகிறார் திருமதி இராதாதியாகராஜன் அவர்கள். பாச்சுடர் வளவ. துரையனின் கட்டுரை கண்ணபிரானின் குடமாடு கூத்தினையும், குடைக் கூத்தினையும் நுணுகி ஆராய்வதைக் காண்கிறோம். ஆலய உலாவில் பனையபுரம் அதியமான் கடப்பாக்கம் அருணாசலேசுவரர் ஆலயத்தை விவரிக்கிறார். கடல் தாலாட்டும் கரையில் அமைந்துள்ள இத்திருத்தலத்தில் இடைக்காட்டு சித்தர், இங்கு இப்போதும் வழிபடுவதாகக் கூறுவது, அறிந்து இன்புறத்தக்கதாகும். இவ்வரிசையில் நாமக்கல் அருள்மிகு நரசிம்ம சுவாமி மற்றும் ஆஞ்சநேயர் ஆலயத்தையும் அறிந்து மகிழலாம்.

கண்ணப்ப நாயனார் இறைவன் பால் கொண்ட அன்பின் திறத்தைப் பறைசாற்றும் கட்டுரையினையும், காளியின் கருணையை வாரியார் சுவாமிகளின் வார்த்தை ஜாலத்திலும் இவ்விதழில் காண்கிறோம்.

சித்திரக் கவிகளுள் சிறந்ததான திருமங்கையாழ்வாரின் திருவெழு கூற்றிருக்கை உரையுடன் இவ்விதழில் வெளியாகியுள்ளது.

இறையருளால் எல்லோரும் எல்லாமும் பெற்று இன்பமாக வாழவேண்டுமென்று பிரார்த்திப்பதுடன், மங்கலம் பொங்கும்

"இனிய தீபாவளி நல்வாழ்த்துக்களை" தெரிவித்து மகிழ்கிறேன்.

வாழி நலம் சூழ: வளர்க வையகம்

அன்புள்ள

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.)

முதன்மை செயலர் /ஆணையர்


இந்து சமய அறநிலையத்துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 034.

# குறளோவியம்



சந்தனமெடுத்துச் செய்த உருவமொன்று நடந்து வருகிறது. கையில் ஓர் ஊன்றுகோல். அதுவும், தரைக்கு வலிக்குமேயென்று அஞ்சியோ என்னவோ மெதுவாக ஊன்றப்படுகிறது. அருள் பொழியும் முகம். கனிவு ததும்பும் விழிகள். புன்னகையைத் தேக்கியிருக்கும் பொக்கை வாய்ப் பூவிதழ்கள். அவரைச் சுற்றி நூற்றுக்கணக்கானவர் இருக்கின்றனர். என்றாலும் அவர்கள் எல்லாம் பகல் நேரத்து விண்மீன்களாகவும், அவர் மட்டுமே கதிரவனாகவும் நம் கண்களுக்குக் காட்சி தருகிறார். அவர் வாய்மையின் வடிவம். அன்பின் திருவுருவம். அவர்தான் கருணைக் கடல் காந்தியடிகள்.

அறவழியே அவர் வழி. அநியாயத்தை எதிர்க்கும்போது அவர் தன்னைத் தானே பலி கொடுத்துக் கொள்ளவும் தயாராகக் களம் நோக்கிச் செல்வார். இந்திய மண்ணின் சுதந்திரத்தைப் பெற்றிட அவர் தியாக நெருப்பில் குளித்தார். அந்த நெருப்பிலிருந்து அவர் புடம்போட்ட தங்கமாக வெளிவந்தார். அடிமைத்தனம் எங்கிருந்தாலும் அவர் அதனைக் களைந்திடவே விரைந்தோடுவார். மனிதனை மனிதன் தீண்டக்கூடாது எனும் சாதிக்கொடுமையை வேரோடு வீழ்த்தக் கொடி தூக்கினார். சமுதாயத்தைச் சாய்க்கும் தீமைகளாம் குடியாட்டம், குதிரை ஓட்டம் முதலியவற்றை அறவே ஒழிக்க வேண்டுமென நாளெல்லாம் பாடுபட்டார். அமளிகள், கலகங்கள், குழப்பங்கள் எங்கு நடந்தாலும் அவை ஓயும் வரை உண்ணமாட்டார், உறங்கமாட்டார், மகாவீரரைப் போல், புத்தரைப்போல்,

**''என்பி லதனை வெயில்போலக் காயுமே**

**அன்பி லதனை அறம்.''**


என்றுரைத்த வள்ளுவரைப்போல் வாழ்ந்து காட்டியவர் அவர். அந்த உலக உத்தமர்தான் அதோ வருகிறார்.

மேற்றிசையில் கதிர் மறையும் நேரம். இளங்காற்று மென்மையாக வீசி, அவரை வலம் வருகிறது. அவர் அந்த மேடையில் அமர்ந்து இறைவணக்கம் தொடங்கப் போகிறார். அவரோடும் அவர் இதய உணர்வுகளோடும் இணைந்து அங்குள்ள நல்லோர் அந்த வணக்கப்பாடலை இசைக்கப் போகின்றனர். எப்பொழுது வருவார் என்று எதிர்பார்த்து ஏங்கிய விழிகளுக்கு விருந்தாக, எப்பிணியையும் நெஞ்சிலிருந்து நீக்கும் மருந்தாக, அவர் வந்துவிட்டார்.

அங்குள்ளோர் கரங்கள் அனைத்தும் மலர்ந்த பூக்கள் மீண்டும் மொட்டானது போல் விளங்குகின்றன. ஆம், அனைவரும் அவரை வணங்குகின்றனர். அவரும் வணங்குகிறார். அந்த வணக்கத்தைச் சூழ்ந்திருந்தோர் வாழ்த்தாக எண்ணிக் கொள்கின்றனர். காலமுணர்த்தும் கருவி அவரது இடுப்பிலே ஆடிக் கொண்டிருக்கிறது. கூப்பியிருந்த கரங்களில் ஒரு கரம் அவரை நோக்கி நகருகிறது கூட்டத்திலிருந்தவர்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, அந்த மனிதன் மட்டும் அவரருகே செல்கிறான். ஏன் அருகே செல்கிறான்? என்று நினைப்பதற்குள்ளாக, அவன் அவரைத் தாழ்ந்து வணங்குகிறான். அந்தத் தும்பை மலர் உள்ளம் அவன்மீது அன்பை அள்ளி

வீசுகிறது. அம்மவோ! அந்தக் கொடியவனின் கும்பிட்ட கைக்குள்ளே கொலைக்கருவி பதுங்கியிருக்கிறது. அந்தக் கைத்துப்பாக்கி, திடீரென அந்த இடத்தின் அமைதியைக் கெடுக்கிறது. அசைபோட்டவாறு கண்மூடியிருக்கும் பசுவின்மீது புலியொன்று பாய்ந்தது போல் அந்த அமைதியான சூழ்நிலையின்மீது வேட்டுச்சத்தம் தாக்கியது.

அமைதி அழிந்தது! இருள் மூடிக்கொண்டது. இதயப் பகுதியிலிருந்து குருதி வெள்ளம் பெருக்கெடுக்க,அந்த எளிய உருவம், ஏழைகளின் நம்பிக்கை விளக்கு, பூமியில் சாய்ந்துவிட்டது. தொழுத கைக்குள்ளிருந்த படை, நாட்டுத் தந்தையின் உயிரைக் குடித்துவிட்டது. இது போலவும் நடக்கக்கூடும் என்பதை வள்ளுவரின் நுண்ணறிவு எப்படித்தான் முன்கூட்டி உணர்ந்திருந்ததோ!



மாண்புமிகு தமிழக முதல்வர்
டாக்டர் கலைஞர் அவர்கள்

''தொழுத கையுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்

அழுத கண்ணீரும் அனைத்து. ''

பகைவர்கள் வணங்குகின்றபோது அவர்களின் கைக்குள்ளே கொலைக்கருவி மறைந்திருக்கும், அவர்கள் கண்ணீர் கொட்டிஅழுவதும் அப்படிப்பட்டதே என்று அடையாளங் காட்டுகிறார் அவர்! அண்ணல் காந்தியடிகளின் முடிவு. இந்தக் குறளை மெய்ப்பிக்கும் எடுத்துக்காட்டல்லவா?

அதிகாரம் - 83 கூடாநட்பு பாடல் - 828

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் குறளோவியம் நூலிலிருந்து நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது

## இதழின் உள்ளே ...


| | | |
|---|---|---|
| 1 | சகலகலாவல்லி மாலை - குமரகுருபரசுவாமிகள் | 5 |
| 2 | கடம்பூர் மேவிய விடங்கள் - தில்லை. சிவ. அருணாசலம் | 6 |
| 3 | தமிழிசைக் காவலர் திருஞானசம்பந்தர் - தமிழாகரர் தெ. முருகசாமி | 8 |
| 4 | திருக்கோயில்களின் வளர்ச்சி நிலை - டாக்டர் திருமதி ராதா தியாகராஜன் எம்.ஏ., பி.எச்டி | 11 |
| 5 | குடமாடு கூத்தன் - பாச்சுடர் வளவ துரையன் | 14 |
| 6 | இடைக்காட்டு சித்தர் வழிபடும் அருணாசலேசுவரர் - பனையபுரம் அதியமான் | 17 |
| 7 | ஆறுமாமுகனின் அவதாரம் - முனைவர். இரா. தர்மாம்பாள், எம்.ஏ., எம்ஃபில், பி.ஹெச்டி | 22 |
| 8 | காளியின் கருணை - அருள்மொழியரசு கிருபானந்தவாரியார் சுவாமிகள் | 25 |
| 9 | கண்ணப்பர் | 28 |
| 10 | உலகம் உய்ய உதித்த உடையவர் - பெ. இராமநாதபிள்ளை | 30 |
| 11 | திருமங்கையாழ்வார் அருளிய திருவெழு கூற்றிருக்கை | 32 |
| 12 | அருள்மிகு நரசிம்ம சுவாமி திருக்கோயில் மற்றும் ஸ்ரீஅருள்மிகு ஆஞ்சநேயர் திருக்கோயில் நாமக்கல் | 37 |


கயிலையே மயிலை !
மயிலையே கயிலை !!
அருள்மிகு கற்பகாம்பாள்

# குமரகுருபரர் அருளிய சகலகலாவல்லிமாலை

வெண்தாமரைக் கன்றி நின்பதந்தாங்க என்வெள்ளை உள்ளத்
தண்தாமரைக்குத் தகாதுகொலோ? சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒழித்தான் பித்தாக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவை கொள் கரும்பே! சகலகலாவல்லியே

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்தருள்வாய் பங்கய ஆசனத்தில்
கூடும் பசும்பொற்கொடியே! கனதனக் குன்றும் ஐம்பால்
காடும் சுமக்கும் கரும்பே சகலகலாவல்லியே

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமுது ஆர்ந்து உன் அருட்கடலில்
குளிக்கும் படிக்கு என்று கூடுங்கொலோ! உளம் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவல் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாபமயிலே சகலகலாவல்லியே

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய் வடநூல் கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக்கடலே சகலகலாவல்லியே

பஞ்சப்பிதம் தரு செய்ய பொற்பாத பங்கேருகம் என்
நெஞ்சத்தடத்து அலராதது என்னே? நெடுந்தாட்கமலத்
தஞ்சத்துவசம் உயர்த்தோன் செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத்தவிசு ஒத்திருந்தாய் சகலகலாவல்லியே

பண்ணும், பரதமும், கல்வியும் தீஞ்சொற்பனுவலும்யான்
எண்ணும் பொழுது எளிது எய்த நல்காய், எழுதாமறையும்
விண்ணும், புவியும், புனலும், கனலும், வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகலகலாவல்லியே

பாட்டும் பொருளும் பொருளால் பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும்படி நின் கடைகண் நல்காய், உளங்கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதந்தெளிக்கும் வண்ணம்
காட்டும் வொள்ளோதிமப் பேடே! சகலகலாவல்லியே

சொல் விற்பனமும் அவதானமும் கல்வி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்து அடிமைகொள்வாய்; நளினாசனஞ்சேர்
செல்விக்கு அரிதென்று ஒரு காலமும் சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப்பேறே! சகலகலாவல்லியே

சொற்கும் பொருட்கும் உயிராமெய்ஞ்ஞானத்தின் தோற்றம் என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்? நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு அரசு அன்னம் நாண நடை
கற்கும் பதாம்புயத்தாளே! சகலகலாவல்லியே

மண்கண்ட வெண்குடை கீழாக மேற்பட்ட மன்னரும் என்
பண் கண்டளவில் பணியச் செய்வாய்; படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ சகலகலாவல்லியே.

# கடம்பூர் மேவிய விடங்கன்

தில்லை.சிவ.அருணாசலம்

''என்கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற அற்புத மணி வார்த்தைகளை அப்பர் அடிகளின் திருவாக்கின் மூலம் உலகத்தவர்க்குச் சிவபெருமான் அருளிச் செய்த திருத்தலம் திருக்கடம்பூர் ஆகும். இந்நாளில் இது மேலைக் கடம்பூர் என்று அழைக்கப்படுகிறது. இந்த எழில்மிகு சிற்றூர் சிதம்பரத்திற்குத் தென்மேற்கே 30 கி.மீ தொலைவிலும், காட்டு மன்னார்குடியிலிருந்து 6 கி.மீட்டர் தொலைவிலும் உள்ளது.

காவிரியின் வடகரைத் தலங்கள் 63ல் இது 34வது தலமாகும். அப்பர் சுவாமிகளும் திருஞானசம்பந்தப் பெருமானும் பாடிப்பரவிய பதியாகும். சுந்தரர் ஊர்த்தொகையிலும் மாணிக்கவாசகர் போற்றித் திருவகவலிலும் இதனைப் போற்றியுள்ளனர். வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், அருட்பிரகாச இராமலிங்க வள்ளலார் முதலியோரும் பாடிப் பரவியுள்ளனர்.

சிற்ப நூல்கள் குறிப்பிடும் ஒன்பதுவகை ஆலயங்களுள் கரக்கோயில் ஒன்றாகும். இது தேர் வடிவமாகச் செய்யப்பட்டதாகும். தேவாரத்துள் இந்த ஆலயம் கரக்கோயில் என்று அப்பரடிகளால் குறிக்கப்பட்டுள்ளது. அவர் பதிகத்தின் அனைத்துப் பாடல்களிலும் கரக்கோயில் என்றே குறித்துள்ளார்.

அன்பர்கள் முருகனைத் துதிக்கும், வகையில் ஓதும் நம் கடம்பனைப் பெற்றவன் என்ற பாடல் இத்தலத்திற்கே உரியதாகும். இக்கோயிலைக் கற்றளியாக்கித் திருப்பணி செய்த குலோத்துங்கச் சோழன் அப்பர் வாக்கினை அடியொற்றி அழகிய சக்கரங்கள், அலங்காரமான குதிரைகள் பூட்டிய தேராகவே அமைத்துள்ளான். அத்துடன் புராண வரலாறுகள் பலவற்றை நினைவூட்டும் வகையிலும் சிற்பங்களைப் படைத்துள்ளான். இதில் அஷ்டபர்வதங்களை அமைத்திருப்பதுடன் அதுபற்றி குறிப்புக்களையும் மேலே பொறித்திருப்பது கண்டு மகிழத்தக்கதாகும். பதஞ்சலி முனிவர் தலைக்குமேல் நடராசர் ஆடிக்கொண்டிருப்பது, கண்ணை இடந்து அப்ப முயலும் கண்ணப்பனை லிங்கத்திலிருந்து ஒருகரம் வெளிப்பட்டு தடுப்பது. தலைகீழாக நடந்து கயிலைக்குச் செல்லும் பேயுருவப் பெருமாட்டியான காரைக்காலம்மையார் முதலிய வடிவங்கள் கண்ணையும் கருத்தையும் கவருகின்றன.

இந்த கருவறையைக் கண்டு மகிழ்ந்து வலம் வந்தபின் கருவறையைக்காணச் செல்லுகிறோம். கருவறையில் பெருமான் அமிர்தகடேசுவரர் என்னும் பெயருடன் சிவலிங்கத் திருமேனியராக விளங்குகிறார். அமுதத் துளியிலிருந்து தோன்றியதால் அமுதீசர், அமுதலிங்கம் எனப்பலவாறு அழைக்கப்படுகின்றார்.

இவர்தோன்றியதற்கான வரலாறு சுவையானது

மிகுந்த முயற்சிசெய்து பாற்கடலைக் கடைந்து பெற்ற அமுதத்தைத் தேவர்கள் பருக முற்பட்டனர்.

அவர்கள் விநாயகப் பெருமானை வணங்கவுமில்லை, நினைக்கவுமில்லை இதை அறிந்த விநாயகர் கணப்பொழுதில் அமிர்த கலசத்தை எடுத்துக் கொண்டு பூமிக்கு வந்து இங்கேயுள்ள கடம்பவனத்தில் ஒளித்து வைத்துவிட்டார். நெடுநேரம் தேடிக் களைத்த தேவர்கள், தம் ஞானத்தால் உணர்ந்து விநாயரைப் போற்றினர். விநாயகர் மகிழ்ந்து அமுதகலசத்தின் இருப்பிடத்தைக் கூறினார். அவர்கள் இங்கு வந்து அமுத குடத்தை எடுத்துச் சென்று அருந்தினர். அவர்கள் எடுத்துச் சென்றபோது சில துளிகள் பூமியில் சுயம்புவாக முளைத்தெழுந்த லிங்கத்தின் மீது நிறைந்தது. அன்றுமுதல் பெருமான் அமிர்தகடேசுவரர் ஆனார்.

இத்தலத்திற்கு ரோமரிஷி வந்து வழிபாடு செய்தார். ஒரு சமயம் இந்திரன் இங்கு வந்து அமுதீசரை வழிபட்டான். அவன்தான் கரக்கோயில் வடிவாக (தேர்வடிவாக) இதனை அமைத்தான் என்று கூறுகின்றனர். இதன் அழகைக் கண்டு மகிழ்ந்த அவன் இதை அப்படியே பெயர்த்துக் கொண்டு செல்ல முயன்றான். அப்போது விநாயகர் காலால் அழுத்தியதுடன் ஆரவாரம் செய்தார். தேர் அப்படியே பூமியில் அழுந்திவிட்டது. இந்த

விநாயகர் ஆரவார விநாயகர் எனும் பெயரில் கன்னிமூலை கணபதியாக வீற்றிருக்கின்றார்.

இந்திர சம்பந்தம் உடையதாலும், அமுதீசராகப் பெருமான் விளங்குவதாலும் திருக்கடையூரோடு இணையாக வைத்து போற்றப்படுகிறது. இங்கேயும் அறுபது வயது பூர்த்தி ஆயிரம் பிறைகண்ட விழா முதலியவற்றைச் செய்து வளமையான வாழ்வைப் பெறலாம்.

இங்கு வீற்றிருந்து அருள்பாலிக்கும் அன்னைக்கு அருள்தரும் சோதி மின்னம்மை என்பது பொருள். இவள் நமது அறிவைப் பிரகாசப்படுத்தி மேன்மை பெற வைக்கிறாள். தீர்த்தம் சிவதீர்த்தம் இது கோவிலுக்கு வடக்கே உள்ளது. கோயிலுக்கு மேற்கில் சக்தி தீர்த்தம் என்ற தீர்த்தமும் உள்ளன. (அதில் தேசப்பிதா மகாத்மாகாந்தி அடிகளின் புனித அஸ்தி கரைக்கப்பட்டது). தலமரம் கடம்பமரம் ஆகும்.



இக்கோயிலின் திருப்பணியை முன்னின்று செய்தவர் ஸ்ரீ கண்ட சிவம் என்னும் சிவாசாரியார் என்கின்றனர். இவர் கிழக்கு வங்காளத்தைச் சேர்ந்தவர் என்று கருதப்படுகிறது. இவர் ஒன்றரை அடி உயரமுள்ள நடராச விக்கிரகத்தைத் தனது உபாசனா மூர்த்தியாகக் கொண்டிருந்தார் என்றும், அவர் சிவபதம் அடைந்த பின் அவர் நினைவாக இக்கோயிலுக்கு அளிக்கப்பட்டதென்றும் கூறுகின்றனர்.

இது ஒப்பற்ற கலைப்படைப்பாகும். இதனை தசபுஜரிஷபதாண்டவர் என்றும் கூறுகின்றனர். இடபம் நிற்க அதன்மீது பத்துக் கரங்களுடன் சிவபெருமான் சதுர தாண்டவம் ஆடுகிறான். முன்கரத்தில் நீண்ட கத்தியைப்பற்றிச் சுழற்றி ஆடுகிறான். மற்றைய கரங்களிலும் சூலம், ஈட்டி, கபாலம், பாம்பு, கேடயம், தண்டம், குத்தீட்டி முதலியவை உள்ளன. பீடத்தில் பூதகணங்கள் தும்புரு நாரதர் ஆகியோர் உள்ளனர் நெடுநாட்கள் காட்சிப் பொருளாக இருந்த இந்தத் திருவுருவம் (21.06.2002) குடமுழுக்கு விழாவுக்குப் பின்னர் ஒவ்வொரு பிரதோஷ நாளிலும் சிறப்புடன் வழிபடப்படுகிறது. (சிலர் இராஜேந்திர சோழன் வங்காளத்தை வெற்றி பெற்றபோது அங்கிருந்து கொண்டுவந்தான் என்றும் கூறுகின்றனர்)

இது இராமாயண காலத்திற்கு முற்பட்டதென்பர். இராமபிரான் காலத்தில்தான் சனீசுவரருக்கு காகவாகனம் உண்டானதாகும். அதற்கு முன்பு சனிக்கு கழுகுவாகனமே இருந்ததென்பர். இத்தலத்தில் சனீசுவரருக்குக் கழுகு வாகனம் உள்ளது.

கி.பி 1110ல் குலோத்துங்கச் சோழனால் கற்றளியாகத் திருப்பணி செய்யப்பட்டு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. பல ஆண்டுகள் பல திருப்பணிகள் நடைபெற்றுள்ளன. கி.பி 1868ல் தொடங்கி 1880ல் திருப்பணி நிறைவேற்றிக் குடமுழுக்கு செய்தவர் தேவகோட்டை அருணாசலம் செட்டியார். 1897ல் தேவகோட்டை சோமசுந்தரம் செட்டியார் திருப்பணியும் குடமுழுக்கும் செய்துள்ளார். 1942ல் மக்கள் எளிமையான முறையில் திருப்பணி செய்து குடமுழுக்கு செய்தனர். 23.4.75, 03.04.80, 20.04.2000 ஆகிய நாட்களிலும் குடமுழுக்குகள் நடைபெற்றுள்ளன. இத்திருக்கோயில் 21.06.2002ல் சிறப்புடன் திருப்பணி செய்து பொலிவுடன் விளங்குகிறது.

தமிழகச் சுற்றுலாத்துறை பல வட்சரூபாய் செலவில் கோயிலைச் சுற்றிலும் சுகாதார வளாகம், நந்தவனம், ஊர்திகள் நிறுத்துமிடம், சமுதாயக் கூடம் ஆகியவற்றை நிர்மாணிக்க திட்டம் தீட்டி தெய்வீகச் சுற்றுலாத்தலமாக ஆக்க ஆணை பிறப்பித்துள்ளது.

கவின்மிகு கல்தேரைக் காணவும், கடம்பூர்மேவிய விடங்கனைத் தரிசித்து நீண்ட ஆயுள் பெறவும். சோதிமின்னம்மையைத் தரிசித்து சகல நலம் பெறவும் கடம்பூர் வருக வளம் பல பெறுக.

# தமிழிசைக் காவலர் திருஞான சம்பந்தர்



**நம்** தாய்த் தமிழ் மொழி இசையுடன் பிறந்த செம்மொழி, அது 'த' என்ற வல்லினத்தையும் 'மி' என்ற மெல்லினத்தையும் 'ழ்' என்ற இடையினத்தையும் கொண்டு ஒலிக்கும் மூவகை எழுத்துக்களாலானதொரு இழுமென் ஓசையுடைய ஒண்டமிழ்மொழி, இத் தமிழ் என்ற சொல்லைத் தொடர்ந்து ஒலித்தால் அவ்வொலி அமிழ்து அமிழ்து என்பதாக ஒலித்து முடிவில் தமிழ் தமிழ் என்பதாக முடியும். இவ்வொலி அமைப்பு தமிழும் அமிழ்தமும் ஒன்று என்பது போன்ற குறிப்பைத் தருவதாக இருக்கும், ஆதலால் உண்டாரைச் சாகடிக்காத அமிழ்தத்தைப் போலத் தமிழ் மொழியைத் தம் தாய்மொழியாய்க் கொண்டாரை மரணமிலாப் பெருவாழ்வுடையராக ஆக்குவது தமிழ் என்பதால் இயற்கையோடியைந்த தமிழர் வாழ்வில் இசையின்பால் களிப்பு மகத்தானது எனலாம்.

**''தெய்வம் உணாவே, மா, மரம், புள், பறை,**
**செய்தி, யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப''**

(அகத் - 18)

எனத் தொல்காப்பியப் பொருளதிகார நூற்பாவில் கூறப்பட்ட கருப்பொருள் பட்டியலில் பறை, யாழ் இரண்டும் இசைக் கூறுகளை உணர்த்தும் குறியீட்டுச் சொற்களாகும். பரிபாடல், கலித்தொகை, பதிற்றுப்பத்து போன்ற பழந்தமிழ் நூல்கள் இசைப் பகுப்போடுள்ளவை. ஆற்றுப்படை நூல்களிலும், புறநானூற்றில் காணும் சில திணை, துறைப் பாடல்களிலும் இசைக் குறிப்புகள் உள்ளன. இப்படியான இசைப்பரப்பிற்குரிய மூலமாகத் தமிழ் உள்ளதால் தான் அது 'இசைத்தமிழ்' என்ற சிறப்பைப் பெற்றது. இதுவே தமிழிசைஎன்பதாகப் பிற்காலத்தில் உணரப்பட்டது. மேற்கத்தியஇசை தமிழர் வாழ்வில் கலந்ததால், இசைத்தமிழ் - தமிழிசையாகத் தனித்து உணரப்பட்டது எனலாம்.



தமிழாகரர் தெ.முருகசாமி
புதுச்சேரி - 9

பழந்தமிழர் வாழ்வில் இரண்டறக்கலந்து விட்ட இசை, சங்க காலத்திலிருந்து வழிவழியாகக் காத்த பெருமை இசைவாணர்களைப் போல இலக்கியப் புலவர்களுக்கும் உண்டு. முத்தமிழ் பாவிய சிலப்பதிகாரக் காவியத்தில் இசைக் கூறுகள் கொட்டிக் குவிக்கப்பட்டுள்ளன. காப்பிய காலத்தின் இறுதியில் தோன்றிய இருண்ட காலத்தில் இசைத் தமிழுக்குத் தொய்வு ஏற்பட்டாலும் முளைத்தெழுந்த பக்தி இயக்க காலத்தில் இசைத்தமிழ் உயிர்த் தெழுந்தது.

'உயிர் உய்தியடைய இசை ஒருதடை' எனக் கூறிய பௌத்த சமண வாதங்களுக்கு எதிர்குரலாகவே மூவர் பாடிய தேவாரப்பாடல்கள் இசைத்தமிழைக் கொள்ளை போகாமல் காத்தன, தமிழோடிசை பாடல் மறந்தறியாத நிலையை மூவரும் பரப்பினர். சம்பந்தர், அப்பர், சுந்தரர் என்ற தேவார மூவருள் இசைத் தமிழ் பரப்பிய பங்களிப்பில் திருஞான சம்பந்தருக்குக் கூடுதல் பெருமை உண்டு, ஆதலால் அவர் **'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தர்'** எனப் புகழ்ந்துரைக்கப்பட்டார். தாம் செல்லும் இடங்களிலெல்லாம் யாழ் வாசிக்கும் ஒருவரை உடன் கொண்டு சென்று ஆங்காங்கே தெய்வப்பற்றைத் தமிழிசையால் நிறுவினார். அதனால்தான் சேக்கிழார் பெருமான் திருஞானசம்பந்தரை, **'செஞ்சடையார் சீர்தொடுக்கும் கானத்தின் எழுபிறப்பை'** என இசைத்தமிழ் காத்த கர்த்தாவாக அறிமுகப்படுத்தினார்.

இறைவனை இசையுருவாகவே தமிழர்கள் கண்டு வழிபட்டனர், பண்ணிடைத் தமிழ் ஒப்பாய் என்றார் சுந்தரர், திருஞானசம்பந்தர்,

**பண்ணும் பதம்ஏழும் பலஓசைத் தமிழவையும்**

**உண்ணின்ற தோர் சுவையும் உறுதானத்து ஒலிபலவும்**

இறைவனே என்று திருவீழிமிழலைப் பதிகத்தில் கூறியுள்ளார். திருநாவுக்கரசரோ **'வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர் இனத்தகத்தான்'** என இறைவன் இசைத்தமிழ் கேட்பதிலேயே விருப்பமுடையவன் என்பதைத் தம் தேவாரத்தில் பதிவு செய்துள்ளார். திருவைகாவூர்ப் பதிகத்தில் சம்பந்தர், இறைவன் இசைகேட்பதில் மிகுநாட்டம் உடைய பண்பினன் என்பதாகக் கூறும்போது, **''கோழைமிடறாக இசைகூடும் வகையில் கவியாவை சொன்ன சொல் மகிழும் ஈசன்''** என்றார். இழுக்குடைப் பாட்டிற்கு இசைநன்று என்பதை இறைவனே அங்கீகரிப்பதைப் போலச் சம்பந்தரின் கூற்று அமைந்துள்ளதால், இறைவன் இசைப்பித்தன் எனத் தெரிகிறது, அதனால்தான் அவன் இசைகேட்டு மகிழ்ந்ததற்கு அடையாளமாகவே பாடல் பாடியோர்க்குப் பரிசு தந்து மகிழ்ந்த குறிப்பை மணிவாசகர், **'பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளும் பெண் சுமந்த பாகத்தான்'** என அம்மானைப் பாடலில் குறிபிட்டுள்ளார். **''அனப்பில் கீதம் சொன்னவர்க்கு அடிகள் அருளுமாறே''** என அப்பரும் கூறியுள்ளார்.

இப்படியாகத் தெய்வம் விரும்பும் இசைத்தமிழ் அமைப்பு இருவேறு நிலைகொண்டது, ஒன்று, பாடலைப் பாடும்போதே இசையுடன் அமைத்துப் பாடுவது, மற்றொன்று பாடலைப்பாடியபின் இசையமைப்பது. இவ்விருநிலைகளும் ஒன்றிற்கொன்று தொடர்புடையது. அதற்கு இசைக் கூறுடைய சொற்கள் காரணமாகும். ஒரு பாடலை எதுகை, மோனை என எழுத்து வகையால் அழகுபடுத்துவது யாப்பு. அதே எழுத்து, ஓசைவேறுபாட்டால் பாட்டுக்கு அழகுசெய்யும் போது இசைஎன்ற பெயரைப் பெற்று விடுகிறது. இந்த வகையில் இசைக் கூறுடைய சொல்லும் சொல்லடுக்குகளும் ஒரு வகை அழகைத் தருவதை 'அணி' என்பர் இலக்கணத்தார். இவ் அணியைச் சொல்அடிப்படையில் விவரித்து ஆராயும்போது செவிப்புலனால் நுகரப்படும் ஓசையும் ஒலியும் இசைக் கலைக்கான இலக்கணமாக உருவாக்கம் பெறுகின்றது.

பொருளற்ற வெறும் நாதம் - ஓசை எனப்படும், பொருளுடைய நாதம் - ஒலி எனப்படும். இயக்கமற்ற சிவம் இயங்கும் போது சக்தியாவதுபோல ஓசையும் ஒலியுமான இசைக்கூறு தெய்வீகமாகக் கருதப்பட்டது. இந்தத் தெய்வீக அனுபவத்தை இசைவழிப் பல்வேறாகத்துய்த்த பெருமை திருஞானசம்பந்தருக்கே உண்டு. இந்த உண்மையைத்தான் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள்.

**''காழியம் பதிச்சேய் போலும்**

**கவித்திறம் விழைகின் றேனைப்**

பாழியம் களிறே போல்வார்
பகைமிகப் படுத்த லாமே?''

எனப்பாடுகிறார். இதில் திருஞான சம்பந்தரின் கவித்திறனைச் சுவாமிகள் வேண்டுவது வியப்பாக உள்ளது. அந்த அளவிற்குப் பல்வேறு வகையில் கவிபாடிய சிறப்பு சம்பந்தருக்கு உண்டெனத் தெரிகிறது. அதிலும் குறிப்பாக ஒருமரத்துப் பழம் என்றாற்போலத் திருஞான சம்பந்தர் தாம் பிறந்த சீர்காழியம் பதியைப் பல்வேறு பண்களில் விவரித்துப் பாடியது இசைத்தமிழுக்கான பெருந்தொண்டு எனலாம்.

பேச்சுக்குப் பேச்சு, மொழிக்கு மொழி தம்மைத் தமிழ்வல்ல சம்பந்தனாகிக் கூறிக் கொள்ளும் ஞானசம்பந்தர் மொழிப்பற்றோடு கூடிய ஊர்ப்பற்றுக்கு ஒருமுன் மாதிரியாக வாழ்ந்து காட்டியவராவார். பொதுவாக ஒருவர் தான் பிறந்த ஊரையும் பேசும் மொழியையும் மறந்து விடக் கூடாது. அந்த அடிப்படையில் தமிழை ஆயுதமாகக் கொண்டு தான் பிறந்த சீர்காழியை ஞானசம்பந்தர், வியாழக் குறிஞ்சி, கௌசிகம், சாதாரி, பழம்பஞ்சுரம், காந்தார பஞ்சமம், இந்தளம், நட்டபாடை, தக்கேசி என்ற எண்வகைப்பண் வகையில் இசையமைத்துப் பலபதிகங்கள் பாடியுள்ளார். இவரைப் போலத் தம் ஊரை நேசித்துப் பாடியவர் எவரும் இலர் என்றே கூறலாம்.

தான் பிறந்த ஊருக்குக் காழி, பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை நகர், கொச்சைவயம், கழுமலம் என்ற பன்னிருபெயர்கள் உள்ளதைப் போற்றி மகிழும் ஞானசம்பந்தர் ஒவ்வொரு பெயர்க்கான பதிகப் பாடலை வெவ்வேறு பண் வகையில் பாடித் தன் ஊர்ப்பற்றை வெளிப்படுத்தியுள்ளார். இப்படித் தான் பிறந்த ஊரைப் பல்வேறு வகையாக நேசித்துப் பாடுவதான இலக்கிய வழக்கு, தமிழுக்குப் புதுமையாகும். இப்புதுமை **'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தன'**. எனப்பாடிய பாரதிக்கு முன்னோடியானது என்பதால், ஞானசம்பந்தரை அந்தக் காலத்துப் பாரதி எனலாம், அதுபோலப் பாரதியை இக்காலத்து ஞானசம்பந்தர் எனலாம்.

சம்பந்தர் காலத்தில் அயல் வழக்கு தாய்த் தமிழ் வழக்கைச் சாய்க்க முற்பட்டதால், தமிழ்வல்ல ஞானசம்பந்தன் எனத் தம்மை அடையாளம் காட்டிக் கொள்ளும் போது களப்பிரர் காலத்தில் கொள்ளைபோன தமிழை மீட்ட இசைத் தமிழ்ப் போராளியாகவும் காட்டிக் கொள்கிறார். இதற்குத் தான் பிறந்த சீர்காழிக்கு அமைந்த பன்னிரு பெயர்களைப் பல்வேறு பண்களில் அமைத்துப் பாடுவதை வரம்பாகக் கொண்டதே முக்கிய காரணமாகும். சந்தமில்லாக் கவிக்கு அந்தமில்லை என்ற வழக்கின்படி இசைக்கூறடங்கிய சந்தவகைக்காகவே தம் ஊரின் பன்னிரு பெயர்களை எழுத்தெண்ணிப் பாடுகிறார். ஒற்றெழுத்தில்லாமல் 66 பாடுகிறார். இப்படிப்பாடுவதில் ஓர் இசைநுட்பத்தை வெளிப்படுத்தினார். குறிலே இல்லாத நெட்டெழுத்தாகவே பாடுகிறார். அந்நெட்டெழுத்து ஒவ்வொன்றும் ஓரெழுத்து ஒருமொழியாய்ப் பொருளைப் புலப்படுத்தும் திறம் வாய்ந்தவையாகும. இங்ஙனம் பாடுவதிலும் ஓர் இசைநுட்பத்தை வெளிப்படுத்தினார். இங்ஙனம் காட்டிய பல்வேறு இசைநுட்பங்கள் தமிழை இசைத்தமிழாக ஆக்கியதோடு அவ் இசைத்த மிழைத் தெய்வீக இசைத்தமிழாகக் காட்டிய விதங்களை இனி ஒவ்வொன்றாகக் காண்போம்.

தொடரும்


திருக்கோயில்
திங்கள் இதழ்




| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ 10/ |
| ஓராண்டுச் சந்தா | ரூ 120/ |
| ஐந்து ஆண்டுச் சந்தா | ரூ. 500/ |
| பத்து ஆண்டுச்சந்தா | ரூ 1000/ |
| ஆயுட்காலச்சந்தா | ரூ 1500/ |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

**''திருக்கோயில்'' இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்!**

**திருத்திய விளம்பரக் கட்டண விவரம் :**

| | |
|---|---|
| 1. பின் பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ 15,000/ |
| 2. முன் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 10.000/ |
| 3. பின் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 7,500/ |
| 4. உள்புறம் முழுப்பக்கம் | ரூ 5,000/ |
| 5. உள்புறம் அரைப்பக்கம் | ரூ 3,000/ |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை சென்னை 600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

# திருக்கோயில்களின் வளர்ச்சி நிலை

தமிழ் தழுவிய சாயலும், சால்பு அமைந்த கொள்கையும் பொருந்தி, தமிழ் நாட்டின் பல வகைச் சிறப்புக்கும் வண்ணச் சின்னமாகத் திகழ்வது நம் திருக்கோயில்கள்.

பார்க்குமிடமெங்கும் விண்தொட நிமிர்ந்து நிற்கும் கோபுரங்களைக் கொண்ட திருக்கோயில்களும், அவற்றுள் எழுகின்ற நல்லிசைஅரவமும், நான்மறை ஒலியும், தமிழ் நாட்டிற்கென்றே அமைந்த தனிச் சிறப்பாகும். எம்மருங்கும், நீறணிந்த நெற்றியும், செந்தமிழ் திருப்பதிகம் ஓதும் திருவாயும், கைம்மலரில் கடிகமழும் மலர்மாலைக் கவின் அழகுமாக மக்கள் தினந்தோறும் பெரும் திரளாக வந்து, இறைவனை வழிபட்டு வணங்கும் அற்புதக்காட்சியை நம் கோயில்களில் நாம் காண்கிறோம்.


தமிழர்களின் ஆன்மிகநெறி, சமூகவாழ்க்கை, கலாச்சாரம், பண்பாடு, நுண்கலைகள் ஆகியவைகளின் மையமாகத் திருக்கோயில்கள் தொடர்ந்து இருந்து வருகின்றன.


நம் திருக்கோயில்களில் கணக்கிட முடியாத கலைச் செல்வங்களும், நிலை கண்டு உணர இயலாத ஆன்மிகச் செல்வமும் புதைந்து கிடக்கின்றன. ஆனால் பெருமிதத்திற்குரிய நமது நாட்டின் பெருமை மிக்க பண்பாட்டை, சமயமும் ஆன்மிகமும் இணைந்து இழையோடும் நன்மரபை, சிற்பம் ஓவியம் முதலிய கவின் கலைகளின் அருமைப்பாட்டைக் காலப்போக்கில் நாம் ஆழ்ந்து சிந்திக்காமல் விட்டுவிடுகிறோம்.

**தெய்வம்**

இன்று, வானளாவி நிற்கும் கோயில்களின் அமைப்பு தொடக்க நிலை தொட்டு இவ்வாறு இருந்ததாகக் கூற இயலாது. சங்க நூல்களிலும் அவற்றிற்குக் காலத்தால் முந்திய தொல்காப்பியத்திலும் தெய்வம் பற்றிய குறிப்புகள் உள்ளன. தொல்காப்பியத்தில் ''தெய்வம், உணாவே, மா, மரம், புள், பறை'' என்று கூறப் பெற்ற கருப் பொருள்களுள் ஒன்றாகத் தெய்வம் உள்ளது. நானிலத் தெய்வங்களாக, மாயோன், சேயோன், வேந்தன், வருணன் ஆகியோர் குறிக்கப் பெற்றுள்ளனர்.

வரலாற்று அறிவுக்கு எட்டிய காலந்தொட்டே தமிழினம் இறைவனைக் கண்ணுக்கினிய பொருளாகக் கொண்டு திருக்கோலத் திருமேனி அமைத்து வழிபட்டு வருகின்றது. ''ஆலயமாகஅமர்ந்திருந்தானே'' என்றும், ''ஐந்தன் பெருமையே ஆலயமாவது'' என்றும் திருக்கோயிலின் பெருமையைத் திருமூலர் விளக்குகிறார்.





''நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்

தேடித் திரிந்து, சிவ பெருமான் என்று

பாடுமின், பாடிப் பணிமின் பணிந்தபின்

கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே''

என்கிறார்.

அப்பரடிகளும் திருக்கோயில் வழிபாட்டை வலியுறுத்தி, அதன் பெருமையை எடுத்தியம்புகிறார்.

**''ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே''** என்று மெய்கண்டாரும் கூறுகிறார்.

ஆலய வழிபாடு, உலகியல் சூழலில் ஆழ்ந்து கிடக்கும் உயிர்களைக் கரையேற்றும் பான்மைத்து என்ற கருத்தில், அதைத் ''துறை'', ''கரை'' என்று கொண்டு, கோயில் உள்ள ஊர்களின் பெயர்களோடு, ''துறை'' என்ற சொல்லையும் சேர்த்து வழங்கியுள்ளார்கள். உதாரணமாக, திருப்பெருந்துறை, திருச்சோற்றுத்துறை,, திருவாலந்துறை, திருவாவடுதுறை முதலியவற்றைக் காணலாம். **''பெருந்துறையே என்று பிறப்பறுத்தேன்''** என்கிறார் மாணிக்கவாசகர்.

மேலும் உயிர்கட்கெல்லாம் தலைவனாகத் திகழும் ஈசுவரன் அமரும் இடமாதலின், ஆலயத்தை ''ஈச்சரம்'' என்றும் அழைத்தனர். சான்றாக, ஆனந்தீச்சரம், பசுபதீச்சரம், ஆதித்தேச்சரம், இராசராசேச்சுரம், இராமேசுவரம் முதலியன காணலாம்.

முதன் முதலில், நாட்டுத் தலைவனாகிய அரசனின் அரண்மனையைக் குறிக்கக் ''கோயில்'' என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. கோ என்பது, அரசன். இல் என்பது இல்லம். புறநானூறு, ''சோழன் கோயில்'' எனக் கூறும். நெடுநல்வாடை, ''சிலம்பின் சிலம்பும் கோயில்'' என்றும் பரிபாடல், ''அண்ணல் கோயில்'' என்றும் கூறும்.

பின்னர், உலகெல்லாம் படைத்த மாபெருந் தலைவன் உறைகின்ற இடம், அவனை வழிபடுகின்ற இடம், கோயில் என வழங்கப்பட்டது.

சிலப்பதிகாரத்தில், கோயில் என்ற சொல் ''அரசனின் அரண்மனை'' என்ற பொருளிலும், ''கடவுள் இருக்கும் இடம்'' என்ற பொருளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**''பெரும் பெயர் மன்னவன் பேரிசைக் கோயிலும்''**

**''மறத்துறை விளங்கிய மன்னவன் கோயிலும்''**

என்று அரசனுடைய கோயிலையும்,

**''பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்''**

**''அறுமுகச் செவ்வேள் அணி திகழ் கோயிலும்''**

**''நீலமேனி நெடியோன் கோயிலும்''**

**''நுதல் விழி நாட்டத்து இறையோன் கோயிலும்''**

என்று, இறைவன் உறையும் கோயிலையும் குறிப்பிடுகிறது.

மேலும், கோயில் அமைப்பு பற்றி நூல்கள் இருந்திருக்கின்றன என்பதற்குச் சான்றாகச் சிலப்பதிகாரத்தில்,

**''அறக்களத்து அந்தணர், ஆசான் பெருங்கணி,**

**சிறப்புடைக் கம்மியர் தம்மொடும் சென்று**

**மேலோர் விழையும் நூல் நெறி மாக்கள்**

**பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டம்''**

என்ற அடிகள் காணப்படுகின்றன.

''அம்பலம்'' என்ற பெயரும் கோயிலுக்கு இருந்திருக்கிறது. அம்பலத்துக்குப் ''பொது-இல்'' என்பது மற்றொரு பெயர். இதுவே ''பொதியில்'' என்று குறிப்பிடும் வழக்கம் ஏற்பட்டுள்ளது. ''தில்லைச் சிற்றம்பலம்'', ''திருச் சிற்றம்பலம்'' ஆகியவை சிதம்பரம் கோயிலைக் குறிக்கும். கேரளப் பகுதியில்,

கோயிலை ''அம்பலம்'' எனக் குறிப்பிடும் வழக்கம் இன்றும் உள்ளது. மேலும் ''ஆலயம்'' என்ற பெயரும், பின்னர் வழக்கில் வந்தது. ஆ - ஆன்மா, லயம் - ஒன்றுபடுதல், லயப்படுத்துதல். ஆன்மாவைப் பரம் பொருளோடு ஒன்று படுத்துவதற்குக் கோயில் ஏற்ற இடம் என்று கருதப்பட்டமையால், கோயிலுக்கு ''ஆலயம்'' என்ற பெயரும் கொடுக்கப்பட்டது.

மேலும், கோயிலுக்கு, கோட்டம், மன்றம் என்ற பெயர்களும் இருந்தன.

**''புத்தேளிர் கோட்டம்''**

**''அணங்குடை முருகன் கோட்டம்''**

**''உருகெழு திறல் உயர் கோட்டம்''**

என்ற சங்க இலக்கிய அடிகளாலும், ''கோழிச் சேவற் கொடியோன் கோட்டம்'' என்ற சிலப்பதிகார அடியாலும் அறியலாம்.

**திருக்கோயில்கள்**

கோயிற்கலை, சங்க காலம் தொட்டு நாயக்கர் காலம் வரை ஏறக்குறைய 1400 ஆண்டு கால வரலாற்றினைக் கொண்ட மாபெருங் கலையாகும்.

சங்ககாலத்தில், பெரு மரங்களின் குளிர் நிழலிலும், கொடி தவழும் சோலைகளிலும், இயற்கைச் சூழலிலும், தெய்வ உருவங்கள் வழிபடப்பட்டன. இதனை,

**''தெய்வம் சேர்ந்த பரா அரை வேம்பின்**

**கொழுப்பா எறிந்து குருதி தூஉய்''**

என்ற அகநானூற்று அடிகள் அறிவிக்கின்றன. இம் மரபின் தொடர்ச்சியாக, இன்றும் கிராமங்களில் அரசமரந்தோறும் விநாயகரைப் பார்க்கலாம். தமிழர்கள், மரத்தடியிலும் மலர்ச் சோலையிலும் வீற்றிருந்த தெய்வப்படிமங்களுக்கு, பின்பு ஆலயங்கள் அமைக்க முற்பட்டனர். அப்போதும், ஆதி ஆலயங்களாக இருந்த மரங்களை மறந்து விடவில்லை. அம்மரங்களைத் தொடர்ந்து போற்றி, தாம் அமைத்த ஆலயங்களின் ஒவ்வொன்றினோடும் ஒவ்வொரு மரத்தை இணைத்தே தொடர்ந்து வழிபட்டனர். இந்த முறையில் தான் நமது ஆலயங்களில் ''தல விருட்சங்கள்'' என்ற மரபு தோன்றியிருக்க வேண்டும். மரங்களின் பெயர்களாலும் கூடத் தலத்தெய்வங்களும் தலங்களும் அழைக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, திருவாலங்காடு, திருவேற்காடு, திருக்கச்சியேகம்பம், திருவிடைமருதூர், திருப்பனந்தாள், திருப்பாதிரிப்புலியூர் முதலியவற்றைக் கூறலாம். மேலும், ''கள்ளி நீழற் கடவுள் வாழ்த்து'' என்று புறநானூற்றின் மூலம் கள்ளிச் செடியின் கீழ்க் கடவுளை அமைத்து வழிபட்டமை தெரிய வருகிறது.

பின்னர் சிறிய மண் கோயில்கள் அமைக்கப்பட்டன. சங்க காலத்தில், மரத்தால் ஆகிய அம்பலம் அல்லது மன்றம் செங்கல்லினால் அமைந்த சுற்றுச் சுவரால் சூழப்பட்டு திருக்கோயிலாக விளங்கியது. பாதுகாப்பிற்காகச், சுற்றுமதிலும் கட்டப்பட்டு, வெயிலினாலும் மழையினாலும் பாதிக்கப்படாமல் இருக்க மேற்கூரையும் வேயப்பட்டது.

**''இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென''** என்று அகநானூறும், **''தாமரைப் பொகுட்டின் காண்வரத் தோன்றி''**, **''சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டம்''**, என்று பெரும்பாணாற்றுப் படையும்,

**''மண்ணிலும் கல்லிலும் மரத்திலும் சுவரிலும் கண்ணிய தெய்வம் காட்டுநர் வகுக்க''** என்று மணிமேகலையும்,

**''திருவாரூர்ப் பரவையுள் மண்டளி அம்மானே''** என்று தேவாரமும் பாடுகிறது.

மண்தளி என்பது மண்கோயிலாகவும், சுடுமண் என்பது செங்கற்கோயிலாகவும் இருக்கலாம்.

சங்க காலத்தின் இறுதியில் வாழ்ந்த சோழ மன்னன் கோச்செங்கணான் எழுபது மாடக் கோயில்கள் கட்டினான் என்பதை,

**''இருக்கிலங்கு திருமொழிவாய்**

**எண் தோள் ஈசற்கு**


**எழில் மாடம் எழுபது செய்து**

**உலகம் ஆண்ட**

**திருக்குலத்து வளச் சோழன்''**

என்று திருமங்கையாழ்வார் பாடுகிறார்.

...தொடர்ச்சி அடுத்த இதழில்



டாக்டர் திருமதி இராதா தியாகராசன், எம், ஏ., பி.எச்.டி.,

# குடமாடு கூத்தன்

**- பாச்சுடர் வளவ.துரையன்**

அரி என்னும் திருமால் வந்து மேவியிருக்கும் விண்ணகரம் இத்திவ்ய தேசமே என்று திருமங்கையாழ்வார் பத்துப் பாசுரங்களால் மங்களாசாசனம்செய்துள்ள தலம் திரு அரிமேய விண்ணகரம் ஆகும்.

இது திருநாங்கூரிலேயே அமைந்துள்ள திவ்ய தேசமாகும். சீர்காழிக்குக் கிழக்குத்திசையில் ஐந்து மைல் தொலைவில் அமைந்துள்ளது. குடமாடு கூத்தர் கோவில் என்றால் தான் யாவருக்கும் தெரியும்.

எம்பெருமான் கிழக்கு நோக்கி அமர்ந்து குடமாடு கூத்தன் எனும் திருநாமத்துடன் அருள்பாலிக்கிறார். தாயாரின் திருநாமம் அமிர்தகடவல்லி என்பதாகும்.

திருமகளும் மண்மகளும் இருபாலும் வீற்றிருக்க, ஏழு உலகத்தவரும் வந்து அடிகளைப் பணிந்து வணங்க, வானுலகத்துத் தேவர்களும் வந்து வணங்க அடியவர்களுக்கு அருள் செய்யும் எம்பிரானான திருமால் வீற்றிருக்கும் இடம் இந்த விண்ணகரம் என்று கூறும் வகையில் திருமங்கையாழ்வார்.

**''திருமடந்தை மண்மடந்தை இருபாலும் திகழத்**
**தீவினைகள் போயகல அடியவர்கட் கென்றும்**
**அருள் நடந்து இவ்வேழுலகத் தவர்பணிய வானோர்**
**அமர்ந்தேத்த இருந்த இடம்''** *(1238)*

என்று அருளிச்செய்துள்ளார்.

மேலும் அவர் கோகுலத்தின் ஆயர்பாடியில் கன்றாக வந்த அசுரனை எடுத்து. விளாமரமாய் நின்ற அரக்கன் மேல் எறிந்து இருவரையும் மாயச் செய்ததையும், மாடு கன்றுகளைக் காத்ததையும் கோவர்த்தனக் குன்றை எடுத்து ஆநிரை காத்ததையும் நினைவு கூர்ந்து பணியும் வகையில் இத்திவ்ய தேசத்தை

**''கன்றதனால் விளவெறிந்து கனியுதிர்த்த காளை**
**காமருசீர் முகில்வண்ணன், காலிகள்முன் காப்பான்**
**குன்றதனால் மழைதடுத்துக் குடமாடு கூத்தன்**
**என்றும் மங்களாசாசனம் செய்கிறார்''.**

இப்பாசுரத்தில் உள்ள குடமாடு கூத்தன் எனும் திருநாமம் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கதாகும்.

பெருமான் குடங்கள் எடுத்து ஆடினானா, அல்லது குடை கொண்டு ஆடினானா எனும் மயக்கத்தை இப்பெயர் ஏற்படுத்துகிறது.

குடங்கள் எடுத்து ஏறவிட்டுக் கூத்தாட வல்லவன் என்று பெரியாழ்வார் பாடுவார்.

குன்றம் குடையாய் எடுத்தாய்க் குணம் போற்றி என்பது ஆண்டாள் நாச்சியாரின் அருளிச்செயல் ஆகும்.

குடங்களை எடுத்து ஆடும் கூத்து குடக் கூத்து எனப்படும். பரிபாடலின் இரண்டாம் பாடலில் திருமால் ''குடவல'' என்று போற்றிச் சிறப்பிக்கப்படுகிறார். குடவல என்பது குடக்கூத்தில் வல்லவர் எனும் பொருளைத்தரும்.

தன் மகள் உஷையைக் காதலித்ததால் ப்ரதியும்னனின் மகனான அநிருத்தனை வாணன் சிறை வைத்தான். வாணனின் ''சோபுரம்'' எனும் நகரவீதியில் சென்றுதிருமால் குடக்கூத்தாடி பின் அவனை மீட்டார். பஞ்சலோகங்களாலும், மண்ணாலும் செய்த குடங்களைக் கொண்டு ஆடிய கூத்து இப்பெயர் பெற்றது. தலையில் அடுக்குக் குடங்களிருக்க, இரண்டு தோள்களிலும் குடங்கள் இருக்க, இரண்டு கைகளிலும் குடங்களை ஏந்தி ஆகாயத்திலே எறிந்து பிடித்து இதை ஆடுவார்களாம்.

**''வாணன் பேரூர் மறுகிடை நடந்து**
**நீணிலம் அளந்தோன் ஆடிய குடமும்''**
*(கடலாடுகாதை 54-55)*

என்று சிலம்பு இதைக் காட்டும்.

ஒருசாரார், இதைக் குடைக்கூத்து என்று பொருள் கொள்கின்றனர். மலைநாட்டு திவ்ய தேசமான திருக்கடிகைத்தானத்தில் பெண்கள் குடை பிடித்துக் கொண்டு நடனமாடும் நிகழ்ச்சி நடைபெற்று வந்ததாம். காலப்போக்கில் இது கைவிடப்பட்ட தென்று கூறுகின்றனர்.



''கோயில் கொண்டான் தன் திருக்கடித்தானத்தை
கோயில் கொண்டான் அதனோடு என் நெஞ்சகம்
கோயில் கொள் தெய்வமெல்லாம் தொழ, வைகுந்தம்
கோயில் கொண்ட குடக்கூத்த அம்மானே''

என்கிறார் நம்மாழ்வார்.

ஆனால் வைகுந்தத்தில் பெருமாள் கோபுரத்தைத்தான் குடையாகக் கொண்டுள்ளார். எனவே குன்றத்தைக் குடையாக எடுத்த நிகழ்ச்சியைத்தான் குடக் கூத்து என்று நம்மாழ்வார் பாடுகிறார்.

மேலும் நம்மாழ்வார் தம் பாசுரத்தில்

''பரவி வானவரேத்த நின்ற பரமனைப்
பரஞ்சோதியைக் குரவை கோத்த குழகனை
மணிவண்ணனைக் குடக்கூத்தனை'' என்றும்

''எழுமைக்கும் எனதாவிக்கு இன்னமுதத்தினை எனதாருயிர்
கெழுமிய கதிர்ச்சோதியை மணிவண்ணனைக் குடக்கூத்தனை''
என்றும் அருளிச் செய்கிறார்.

பெரியாழ்வார் குடம், கூத்தன் என்று தம் திருவாக்கால் பிரித்துக் காட்டியது போல நம்மாழ்வார் எடுத்தியம்பவில்லை. குடக்கூத்த என்றே போற்றுகிறார்.

குடமாடு கூத்தன் எனும் திருநாமத்தைத் திருமங்கையாழ்வார் இருதிவ்ய தேசங்களை மங்களாசாசனம் செய்யும்போது அருளிச் செய்கிறார்.

நந்திபுர விண்ணகரப் பெருமாளைப் புகழும் போது.

''தாய் செற உளைந்து தயிருண்டு குடம் ஆடுதட
மார்வர் தகைசேர்...'' என்கிறார்.

இங்குக் குடங்களில் தயிருண்டதைக் கூறுகிறார். ஆனால், இந்த அரிமேய விண்ணகரத்தை மங்களாசாசனம் செய்யும் போது

''காமருசீர் முகில்வண்ணன் காலிகள்முன் காப்பான்
குன்றதனால் மழைதடுத்துக் குடமாடு கூத்தன் குலவுமிடம்''

என்று போற்றுகிறார்.

இங்கு குன்றைக் குடையாய் எடுத்துப் பிடித்ததை நினைவுகூர்கிறார்.

மேலும் குடங்களை எடுத்து ஆடவிட்டுக் கூத்தாடுவது பெருமானின் லீலா விநோதம். ஆனால், குன்றத்தைக் குடையாய்க் கொண்டு அடியவர்களைக் காப்பது அவனது வாத்ஸல்யம்.

மேலும், இத்திவ்ய தேசத்தில் கோவர்த்தன நாதனே எழுந்தருளி இருப்பதால், குடமாடு கூத்தன் எனும் திருநாமம் கிருஷ்ணாவதாரத்தில் குன்றத்தைக் குடையாகப்பிடித்த குடைக் கூத்தினையே குறிக்கிறது என்று துணிந்து கூறலாம்.


सत्यमेव जयते

# INDIA POST

भारतीय डाक
INDIA POST

## EMS SPEED POST

ONE INDIA



ONE RATE

**✷ Local Rs. 12.00**

**✷ Others Rs. 25.00**

(Up to 50 grams)

- ✷ Wide network of more than 1300 locations
- ✷ Online track & trace
- ✷ 24 x 7 booking facility
- ✷ Special offer for Corporate customers
- ✷ Credit facility
- ✷ Free pick-up at door step
- ✷ Insurance facility
- ✷ Contractual service to any place in India

Make Mail Machinable

**2829 5521; 2854 8837**
**2233 0664; 2232 1360**

**Principal Chief Postmaster General**
**Tamil Nadu Circle, Chennai 600002**
*www.tamilnadupost.nic.in*

## இடைக்காட்டூர் சித்தர் வழிபடும் கடப்பாக்கம்

# அருணாசலேஸ்வரர்

பனையபுரம் அதியமான்



இடைக்காட்டு சித்தர் வழிபடும்

**ஸ்ரீ அபீத குசாம்பாள் சமேத ஸ்ரீ அருணாசலேஸ்வரர்**

கடப்பாக்கம், (கிழக்கு கடற்கரை சாலை) காஞ்சிபுரம் மாவட்டம்

இடைக்காட்டுச் சித்தர் வழிபடும் கோயில் - இடைக்கழி நாட்டில் உள்ள பழமை வாய்ந்த ஆலயம். வங்கக்கடலோரம் அமைந்த திருத்தலம். மழைக் காலங்களில் தன்னை தீவு ஆக்கி கொள்ளும் தலம் பழமை வாய்ந்த ஆலம்பரைக் கோட்டை அருகே அமைந்த திருக்கோயில் - ஆலங்காட்டு நடராஜர், ஸ்ரீரங்கநாதர், தவழும் கண்ணன் என அபூர்வ சிற்பங்கள் அமைந்த தலம்- ஸ்ரீவிஜயராகவப் பெருமாள் சன்னதி கொண்டுள்ள அபூர்வ சிவாலயம் - அரசும் வேம்பும் தலவிருட்சங்களாகக் கொண்ட கோயில் திருமணத் தடை நீக்கும் ஆலயம் என, பல்வேறு பெருமைகளைக் கொண்ட தலமாக விளங்குவது, கடப்பாக்கம் ஸ்ரீ அபீத குசாம்பாள் சமேத ஸ்ரீ அருணாசலேஸ்வரர் ஆலயமாகும்.

### தொன்மைச்சிறப்பு

பதினெண் சித்தர்களுள் ஒருவரான இடைக்காடர் என்ற சித்தர் வாழும் பகுதி என்பதால், இப்பகுதி இடைக்காடு என அழைக்கப்பட்டதாகவும், இதுவே மருவி இடைக்கழிநாடு என வழங்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. இந்தச் சித்தர் இன்னமும் அருகில் உள்ள வங்கக் கடலில் காணப்படும் இடையற்த்திட்டு என்ற இடத்தில் வாழ்ந்து வருவதாகவும், பௌர்ணமி தோறும் இந்தச் சிவாலயத்திற்கு வந்து பூஜை செய்வதாகவும் நம்பப்படுகிறது.

இடைக்கழிநாடு என்பது 24 1/2 கிராமங்களை உள்ளடக்கியப் பகுதியாகும். கிழக்கே- பக்கிங்காம் கால்வாயும், மேற்கே - உப்பங்கழிவெளியும் என இருநீர்வழிப் பாதைகளுக்குட்பட்ட பகுதி என்பதால்,இப்பகுதி இடைக்கழிநாடு என அழைக்கப்படுகிறது.

### கடப்பாக்கம் அருணாசலேஸ்வரர்

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டத்தில் உள்ள சென்னை - புதுவை செல்லும் கிழக்குக் கடற்கரைச் சாலையில் உள்ள ஊர் கடப்பாக்கம் ஆகும். இது இடைக்கழி நாட்டில் உள்ள ஒரு ஊராகத் திகழ்கிறது. கடப்பாக்கத்தில் இறங்கி சுமார் 2

கிலோ மீட்டர் கிழக்கே சென்றால் ஸ்ரீ அருணாசலேஸ்வரர் ஆலயத்தை எளிதில் அடையலாம். இவ்வாலயமே இடைக்காடு சித்தர் வழிபடும் தலமாகும். ஆலயத்தின் எதிரில் படித்துறை இல்லாத திருக்குளம் உள்ளது. இனி ஆலயம் செல்வோம்.



கிழக்கு நோக்கி வங்கக் கடற்கரை அருகில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இராஜ கோபுரம் இல்லை. உள்ளே நுழைந்ததும் பலி பீடம், அடுத்து நந்தி தேவர் மண்டபம் அமைந்துள்ளன. நந்தியம்பெருமான், மூலவரைத் தரிசித்த வண்ணம் காட்சி தருகிறார்.

எளிய வடிவ மூலவர் சன்னதியில் நுழைகிறோம். பௌர்ணமி தோறும் இடைக்காடு சித்தருக்குக் காட்சி தரும் இறைவன் அருணாசலேஸ்வரர் எளிய உருவில் கம்பீரமாகக் காட்சி தருகிறார்.

கருவறை சுற்றுப்பிரகாரத்தில் கோஷ்ட தெய்வங்களாக ஸ்ரீவிநாயகர், ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, ஸ்ரீ மகாவிஷ்ணு, ஸ்ரீபிரம்மா, மற்றும் சண்டிகேஸ்வரர் சன்னதியும் அமைந்துள்ளன. இது தவிர, உரலில் கட்டிய கண்ணன், பாம்பணையில் உறங்கும் ஸ்ரீ ரங்கநாதர், திருவாலங்காட்டுக் காளி, திருவாலங்காட்டு நடராஜரின் ஊர்த்துவ நடனம் என அற்புதமான சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. சிவாலயத்தில் முருகர் சன்னதியும், அதனருகே ஸ்ரீ உண்ணாமுலை அம்மன் எனப்படும் அபீதகுசாம்பாள் சன்னதியும் அமைந்துள்ளன. இறைவனைப் போலவே இறைவியின் உருவமும் எளிய வடிவில் அழகுறக்காட்சி தருகிறது. அம்மன் சன்னதிக்கும் முருகன் சன்னதிக்கும் இடையே, ஸ்ரீவிஜயராகவபெருமாள் சன்னதி அமைந்துள்ளது.

**சூரியன் - சந்திரன் வழிபடுதல்**

நவராத்திரிக்கு மறுநாள் சூரிய உதய ஒளியும், மாசி, பங்குனி பௌர்ணமி உதய நிலவொளியும் இறைவன் மீது விழுந்து வணங்குகின்றன.

**வட்ட வடிவ நவக்கிரகங்கள்**

அம்மன் சன்னதியின் எதிரில் வட்ட வடிவில் நவக்கிரக சன்னதி அமைந்துள்ளது.

**தலவிருட்சம்**

இவ்வாலயத்தின் தலவிருட்சமாக அரசும், வேம்பும் விளங்குகின்றன. இந்த இரண்டு மரங்களும் பின்னிப் பிணைந்து ஓங்கி வளர்ந்துள்ளன. அதையொட்டி இத்தலம் திருமண வரம் அருளும் தலமாக விளங்குகிறது என்று கூறுவர். இவ்வாலயம் திருமணத் தடை நீக்கும் தலம் என்பதே சிறப்பு அம்சமாகும்.

**ஆலய விழாக்கள்**

பௌர்ணமி, பிரதோஷம், மாசி தீர்த்தவாரி எனப் பல்வேறு விழாக்கள் சிறப்புடன் கொண்டாடப்படுகின்றன. இவ்வாலயம் காலை 6.00 மணி முதல் 9.30 மணி வரையிலும் மாலை 4.00 மணி முதல் 7.00 மணி வரையிலும் திறந்து இருக்கும். கோயில் அர்ச்சகர் வீடு, பக்கத்திலேயே இருப்பதால் எப்பொழுது சென்றாலும் ஏமாற்றமின்றி இறைவனை மனநிறைவோடு தரிசனம் செய்யலாம்.

**காசி விஸ்வநாதர் ஆலயம்**

கடப்பாக்கம் கடற்கரையோரம்

அமைந்துள்ள ஊர் ஆலம்பரைக் குப்பம் ஆகும். இங்கே தமிழக தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 18-ம் நூற்றாண்டை சார்ந்த ஆலம்பரைக் கோட்டை அமைந்துள்ளது. இது அரிய சுற்றுலாத் தலமாகும். கி.பி.1735ல் நவாப் தோஸ்த் அலிகான் என்பவர் இக்கோட்டையை ஆண்டார். இக்கோட்டையில் நாணய சாலையின் பொறுப்பாளராக பணியாற்றிய பொட்டிப்பத்தன் என்பவர் கிழக்கு கடற்கரை வழியாக காசி, இராமேஸ்வரத்திற்குத் தீர்த்த யாத்திரை செல்லும் பக்தர்களுக்குச் சிவன் கோயிலையும், திருக்குளத்தையும் தங்குவதற்குச் சத்திரத்தையும் ஏற்படுத்தினார். இது இக்கோட்டையின் மேற்கே 2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இக்கோயிலில் உள்ள கல்வெட்டில் இவ்விவரம் காணப்படுகிறது. இக்கோயிலையும் விட பழமை வாய்ந்ததாகக் காணப்படுவது ஸ்ரீ அருணாசலேஸ்வரர் ஆலயமாகும். இவ்விரண்டு ஆலயங்களுமே காசிப்பாட்டை என்ற சாலையில் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

**அமைவிடம்**

சென்னை - புதுவை கிழக்கு கடற்கரைச் சாலையில் கடப்பாக்கம் அமைந்துள்ளது. சென்னையில் இருந்து தெற்கே 105 கி.மீ புதுவையிலிருந்து வடக்கே 45 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. கடப்பாக்கம் முக்கியமான பேருந்து நிறுத்தம் என்பதால், இவ்வழியே செல்லும் அனைத்துப் பேருந்துகளும் கடப்பாக்கத்தில் நின்று செல்லும். எனவே, இவ்வூர் செல்வது எளிது. அங்கிருந்து ஆலயம் செல்ல ஆட்டோ வசதியும் உள்ளது. சொந்த வாகனம் உள்ளவர்களும் எளிதில் செல்ல முடியும்.


திருமண வரம் அருளும் ஆலயம் என்பதாலும், இடைக்காட்டுச் சித்தர் வழிபடும் ஆலயம் என்பதாலும், தெய்வத்தன்மை வாய்ந்த இத்தலத்திற்கு அடியார்கள் சென்று வருதல் நலம் பயக்கும்.




# ஐப்பசியில் அரன் அருள் பெற்ற நாயன்மார்கள்



இடங்கழி நாயனார் - ஐப்பசி - கார்த்திகை



சக்தி நாயனார் - ஐப்பசி - பூசம்



திருமூல நாயனார் - ஐப்பசி - அசுவினி




நின்றசீர் நெடுமாற நாயனார் - ஐப்பசி - பரணி



பூசலார் நாயனார் - ஐப்பசி - அனுஷம்



ஐயடிகள் காடவர்கோன் நாயனார் - ஐப்பசி - மூலம்





திருவொற்றியூர், அருள்மிகு மகாதட்சிணாமூர்த்தி திருக்கோயிலில் 9.9.2008 அன்று ரூபாய் பதினாறு லட்சத்தில் தங்கும் விடுதி, கழிவறை கட்டுதல் பூச்செடிகள் வைத்து புல்வெளி அமைத்தல் போன்ற பணிகள் முடிக்கப்பட்டு திறப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. எஸ். சுரேஷ் இராஜன் அவர்கள், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை முதன்மைச் செயலர் / ஆணையர் திரு. த. பிச்சாண்டி இ.ஆ.ப., அவர்கள், மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் முனைவர் திரு. இராஜேந்திர குமார் இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் முன்னின்று நடத்தியும் கலந்து கொண்டும் சிறப்பித்தனர். ★

இந்து சமய அறநிலையத்துறை தணிக்கை பிரிவுக்கு, தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தின் மூலம் 35 தணிக்கை ஆய்வர்கள் நேரடி நியமனம் செய்யப்பட்டனர். இவர்களுக்கு பணி நியமன ஆணை 04.09.2008 அன்று மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்களால், வழங்கப்பட்டது. இவ்விழாவில், தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலர் திரு. க.முத்துசாமி இ.ஆ.ப அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை முதன்மைச் செயலர் / ஆணையர் திரு. த. பிச்சாண்டி இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். ★



# ஆறுமாமுகனின் அவதாரம்...

முனைவர்.இரா.தர்மாம்பாள்
எம்.ஏ.,எம்.ஃபில், பி.ஹெச்டி



அழகு என்ற சொல்லுக்கு முருகன் என்பது பொருளாகும். குழந்தை வடிவத்திலும், குமரன் வடிவத்திலும் வள்ளி தெய்வானையை மணம்புரிந்த மணாளன் வடிவத்திலும் அழகிற் சிறந்து விளங்குபவன் முருகனே. முருகனின் பிறப்பு பற்றியும். சிறப்புகள் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டிய செய்திகள் மிகப்பலவாகும்.

முருகனின் பிறப்பு

முருகனின் பிறப்பு பற்றிப் பேசும் போது **''பெம்மான் முருகன் பிறவான் இறவான்''** என்று அருணகிரிநாதர் குறிப்பிடுகிறார். வடமொழிக் கவிஞரான காளிதாசர் முருகனின் பிறப்பை குமார சம்பவம் அதாவது அவதரித்த நிகழ்ச்சி என்றே குறிப்பிடுகிறார். சிவபெருமானின் நெற்றிக்கண்ணிலிருந்து முருகன் தோன்றியதாக நம்முடைய புராணங்கள் கூறுகின்றன.

சிவபெருமானுக்கு ஈசானம், தற்புருடம், அகோரம், சத்தியோஜாதம், வாமம் என்ற ஐந்து முகங்கள் உண்டு. இவ்வைந்து திருமுகங்களும்,

ஈசானம் - பளிங்கு நிறத்துடன் - வடகிழக்கு நோக்கியவாறு உச்சியில் உள்ள முகம்

தற்புருடம் - பொன்நிறத்துடன் - கிழக்கு நோக்கிய முகம்

அகோரம் - கருமை நிறத்தோடு - தெற்கு நோக்கிய முகம்

சத்தியோஜாதம் - சிவப்பு நிறமாய் விளங்கும் - மேற்கு நோக்கியமுகம்

வாமம் - வெண்மை நிறம் கொண்டு - வடக்கு நோக்கிய முகம் ஆக விளங்குகின்றன.

சூரியன், சந்திரன், அக்கினி என்ற முச்சுடர்களும் சிவபெருமானின் மூன்று கண்களாக விளங்குகின்றன. வலக்கண்ணாக சூரியனும், இடக்கண்ணாக சந்திரனும், நெற்றிக்கண்ணாக அக்கினியும் அமைந்துள்ளனர். சிவபெருமானின் நெற்றிக்கண் ஆக்கல், அழித்தல், அருளல் என்ற முத்தொழிலையும் செய்யவல்லது. காமனை எரித்தபோது அழித்தல் தொழிலையும், நக்கீரரை அச்சுறுத்துவதற்காகத் திறந்து அருள் புரிந்தபோது அருளல் தொழிலையும் புரிந்தது என்பதை நம்முடைய புராணங்கள் வாயிலாக அறியலாம். சிவபெருமான் தன்னிடம் கொண்டுள்ள ஐந்து முகங்களுடன் பூமியை நோக்கியவாறு அமைந்துள்ள அதோமுகம் (உள் முகம் - வெளியில் தெரியாது என்பர்) என்ற ஆறாவது முகத்தையும் கொண்டு, அவ் ஆறு முகங்களிலும் உள்ள ஆறு நெற்றிக்கண்களையும் ஒரே நேரத்தில். திறந்த போது முருகன் பிறந்தான். இதனால் நெற்றிக்கண், ஆக்கல் தொழிலையும் புரிந்தது என்பர்.



முருகனின் வடிவம்

முருகனின் திருவடிவம் ஒளிவடிவம் என்பர். விநாயகர் ஒலி வடிவானவர் (பிரணவ வடிவம்). முருகனின் சோதிப்பிழம்பான ஒளிவடிவம் பற்றி,

**''அருவமும் உருவுமாகி**
**அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்**
**பிரம்மாய் நின்ற சோதிப்**
**பிழம்பதோர் மேனியாகக்**
**கருணைகூர் முகங்கள் ஆறும்**
**கரங்கள் பன்னிரெண்டும் கொண்டே**
**ஒரு திரு முருகன் வந்தாங்(கு)**
**உதித்தனன் உலகம் உய்ய''**

என்று கந்தபுராணம் கூறுகிறது.

முருகவழிபாடு

முருக வழிபாடு மிகப்

பழமையானது. சங்ககாலத்திற்கு முன்பிருந்தே மக்கள் முருகனை வழிபட்டு வந்துள்ளனர், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று மக்கள் வாழும் இடங்களைப் பிரித்த முன்னோர்கள், மலையும் மலைசார்ந்த பகுதியுமான குறிஞ்சி நிலத்திற்குரிய கடவுளாக முருகனைப் போற்றினர். இதனாலேயே குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம் என்னும் முதுமொழி தமிழ்நாட்டில் வழங்குகிறது. சங்க நூல்களை பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என பிரித்துக் கூறுவர், இதில் பத்துப்பாட்டு நூல்களில் முதலாவதாக வைத்து போற்றக் கூடிய நூல் திருமுருகாற்றுப்படை என்பதாகும். இந்நூல் முருகன் முதல் அடி எடுத்துக் கொடுக்க நக்கீரர் பாடியது என்பர். சங்க நூல்களில் முதலாவதாக வைத்து போற்றக் கூடிய நூல் திருமுருகாற்றுப்படை என்பதாகும். இந்நூல் இறையன்பர்களை முருகனிடத்தில் ஆற்றுப்படுத்துகிறது. பரிபாடலில் முருகனைப் பற்றிய பாடல்களாக 31 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. தொல்காப்பியம், எட்டுத் தொகை நூல்கள், சிலப்பதிகாரம், கல்லாடம் போன்ற பல நூல்களில் முருக வழிபாட்டின் சிறப்புக்கள் கூறப்பட்டுள்ளன.



சுக்குக்கு மிஞ்சிய மருந்துமில்லை, சுப்பிரமணியருக்கு மிஞ்சிய கடவுளுமில்லை, என்பது தமிழ்நாட்டில் தொன்று தொட்டு வழங்கிவரும் முதுமொழி, அது முருக வழிபாட்டின் தொன்மையை புலப்படுத்துகிறது.

### முருகனின் தலங்கள்

முருகப்பெருமான் கோயில் கொண்டுள்ள தலங்களில் சிறப்பாகக் குறிப்பிடப்படுவன ஆறுபடைவீடு என பெயர் பெற்றுள்ள திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருஆவினன்குடி (பழனி) திருவேரகம் (சுவாமிமலை) திருத்தணிகை. பழமுதிர்ச்சோலை என்பனவாகும்.



### அறுபடை வீடு தத்துவம்

பிண்டத்திற்குள்ளே அண்டத்தைக் காணும் தவயோகிகள் மூலாதாரம். ஸ்வாதிஷ்டானம்., மணிப்பூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞா ஆகிய ஆறு மூலாதாரங்களைத் தாண்டி சகஸ்ராரம் என்னும் ஆயிரம் இதழ் கொண்ட தாமரையை அடைந்து முக்தி அடைவர். அதே போன்று. ஆறு மூலாதாரங்களுக்கு ஸ்தூலமாக அறுபடைவீடுகள் அமைந்துள்ளன என்பர். அதை உள்ளன்போடு வணங்குபவர்கள் இம்மை மட்டுமல்லாது மறுமையிலும் இன்பம் காண்பர்.

### முருகனின் திருநாமங்கள்

முருகப்பெருமானுக்குப் பல திரு நாமங்கள் உள்ளன அவற்றில் சிலவற்றையும் அவற்றின் பொருளையும் பின்வருமாறு குறிப்பிடுவர்.

முருகன்: முருகு என்று சொல்லுக்கு மணம், இளமை, அழகு, தெய்வத்தன்மை என்பது பொருளாகும். இயற்கை மணமும், மாறாத இளமையும் அழியாத அழகும், கடவுள் தன்மையும் கொண்டவன் முருகன். முருகன் என்பது பெயர்கள் அனைத்திலும் சிறந்த பெயராகும்.

''அரும்பெறல் மரபிற் பெரும் பெயர் முருக''

என்று திருமுருகாற்றுப்படையும்,

''மொழிக்குத் துணை முருகா என்னும் நாமங்கள்''

என்று கந்தரலங்காரமும் குறிப்பிடுகின்றன.

சுப்பிரமணியன் - தமிழில் முருகன் என்ற பெயர் சிறந்து விளங்குவதைப் போல வட மொழியில் சுப்பிரமணியன் என்னும் பெயர் சிறந்து விளங்குகிறது.

ஆறுமுகம் - இறைவனுக்குள்ள முற்றறிவுடைமை (சர்வஞ்ஞதை), வரம்பிலின்பமுடைமை (திருப்தி, நிறைவு), பாசங்களினின்று நீங்குதல் (அநாதி போகம்), முடிவிலா ஆற்றலுடைமை (அநந்த சக்தி), பேரருளுடைமை (அலுப்த சக்தி) தன் வயமுடைமை (சுதந்திரத்துவம் ) ஆகிய ஆறு குணங்களுமே முருகனுக்கு ஆறுமுகங்களாயின என்பர்.

சோமாஸ்கந்தம் - சிவம், சக்தி, முருகன் மூன்றும் சேர்ந்தது சோமாஸ்கந்தம் என்பர், ஸ, உமா, ஸ்கந்த என்ற மூன்று வடமொழிச் சொற்கள் சேர்ந்ததே சோமாஸ்கந்தம் எனப்படும். முருகன், தாய்தந்தையராகிய சிவசக்தியுடன் சேர்ந்து எழுந்தருளியிருக்கும் நிலையே சோமாஸ்கந்த மூர்த்தம் என குறிப்பிடப்படும் சிவம் - சத்து (உண்மை), சக்தி - சித்து (அறிவு) முருகன் ஆனந்தம் (இன்பம்) என சோமாஸ்கந்த மூர்த்தியில் சத்தும், சித்தும், ஆனந்தமும் சேர்ந்துள்ளன. இதுவும் இம்மூர்த்தியின் தனிச்சிறப்பு.



சத்தும் சித்தும் சேரவே ஆனந்தம் உண்டாயிற்று. சத்துக்கும், சித்துக்கும் இடையே ஆனந்தம் இருக்கிறது. கணவனும், மனைவியுமாக குழந்தைகளுடன் இன்புற்று வாழ விரும்புவோர் இம்மூர்த்தியை வழிபட்டுய்யலாம். இம்மூர்த்தியை

**"ஏலவார் குழல் இறைவிக்கும்**

**எம்பிரான் றனக்கும்**

**பாலனாகிய குமரவேள்**

**நடுவுறும் பான்மை"** என கந்தபுராணம் குறிப்பிடுகிறது.

**முருகனின் முகங்களும், கரங்களும் -**

முருகனின் முகங்கள் ஆறு என்பதால் ஆறுமுகன் என்ற பெயர் பெற்றான். ஆறுமுகங்களும் 1. உலகுக்கு ஒளிதருவது 2. தேவர்களின் வேள்விகளைக் காப்பது 3. தன்னை நாடிவரும் இறையன்பர்களின் துன்பங்களைப் போக்கி வேண்டும் வரம் அருள்வது 4. பிரம்மனுக்கு பிரணவ மந்திரத்தை விளக்கி வேதாகமப் பொருளை விளக்குவது. 5. பகைவர்களையும், தீயவர்களையும் அழித்து உலகுக்கு நன்மை செய்வது, 6. வள்ளி தெய்வானைநாயகியருக்கு மகிழ்வைத் தருவது என தத்தம் தொழில்களைச் செய்து வருகின்றன.

முருகப் பெருமானுக்கு பன்னிருகரங்கள். முதலிரண்டு கரங்கள் தேவர்கள், முனிவர்களைக் காக்கின்றன. மூன்றாவது கரம் அங்குசம் ஏந்தி யானையைச் செலுத்துகிறது. நான்காவது கரம் வேலினைத் தாங்கியுள்ளது. ஏழாவது கரம் முனிவர்களுக்கு, மறைபொருளை விளக்குகிறது. எட்டாவது கரம் மார்பில் உள்ள மணமாலையோடு சேர்ந்துள்ளது. ஒன்பதாவது கரம் வேள்வியை ஏற்கிறது. பத்தாவது கரம் மணியை ஒலிக்கச் செய்கின்றது. பதினோராவது கரம் மழையை அருளுகின்றது.

பன்னிரண்டாவது கரம் மணமாலை சூட்டுகின்றது என்று பன்னிரு கரங்களின் பெருமைகளைத் திருமுருகாற்றுப்படை கூறுகிறது.

பன்னிருகரங்களும் அவை ஏந்தும் படைக்கலன்களும்

முருகனின் பன்னிரண்டுகரங்களில் வலப்புறம் உள்ள ஆறுகரங்களில் 1. அபயமுத்திரை 2. சேவற்கொடி 3. வச்சிரம் 4. அம்பு 5. அங்குசம் 6. வேல் முதலியனவும், இடப்புறம் உள்ள ஆறு கரங்களில் 1. வரத முத்திரை 2. தாமரை 3. மணி 4. மழு 5. தண்டாயுதம் 6. வில் முதலியனவும் உள்ளன.

**முப்பெரும் சக்திகள்-**

வள்ளி - இச்சா சக்தி, தெய்வயானை - கிரியாசக்தி, வேல் - ஞானசக்தி என்பதால் முருகனை வணங்குவோர் இம்மூன்று சக்திகளும் ஒரு சேர பெற்று சிறப்புற்று விளங்குவர்,

**நவவீரர்கள் -**

முருகப்பெருமானுக்குத் துணையாக விளங்கும் தம்பியர் 1. வீரவாகு 2. வீரகேசரி 3. வீரமகேந்திரர் 4.வீர மகேஸ்வரர் 5. வீரபுரந்தரர் 6. வீரராக்கதர் 7. வீரமார்த்தாண்டர், 8.வீராந்தகர் 9. வீரதீரர் ஆகியஒன்பதின்மரும் நவவீரர்கள் என அழைக்கப்பெறுவர். தேவர்களைக் காக்க அசுரர்களுடன் போரிடும் போது இந் நவவீரர்கள் முருகனுக்குத் துணையாக நின்றனர்.

**முருகனுக்குரிய சிறப்பு நாட்கள்**

சஷ்டி திதி, விசாகம், கிருத்திகை ஆகிய நட்சத்திரங்கள், செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை ஆகியவை முருக வழிபாட்டுக்கு உகந்த நாட்களாகும். வெள்ளிக்கிழமை முருகனுக்கு விரதம் இருந்து வழிபட்டால், நினைத்த செயல் கைகூடும் என கந்தபுராணம் கூறுகிறது. கந்தர் சஷ்டி நன்னாளில் முருகனை வணங்கி வாழ்வில் வெற்றியும், வளமும், நலமும், மன அமைதியும் பெறுவோம்,

முருகா சரணம்!

வேலும் மயிலும் துணை!!

# காளியின் கருணை

- அருள்மொழியரசு கிருபானந்தவாரியார் சுவாமிகள்

பனியின் கொடுமையால் மக்கள் வருந்தினார்கள் இரவில் மழைபோல் பனி பெய்தது. மார்கழியில் பனி பெய்வது இயற்கை தானே! அந்தக் கொட்டும் பனியில் அடியார்கள் அதிகாலையில் எழுந்து நீராடி, நீறாடி வீதியில் பஜனை செய்தார்கள்.

அந்த நகரில் மிகவும் புகழ் பெற்ற காளியம்மன் கோயிலிலும் விடியற்காலையில் வழிபாடு நடைபெற்றது. பொன்னப்பன் என்ற பூசாரி. மிகுந்த ஆசாரமாக நெடுநேரம் மணியடித்து, காளிதேவிக்குத் தயிரன்னம் நிவேதித்துப் பூசித்தான்.

பொன்னப்பனுக்குத் திடீர் என்று காய்ச்சல் வந்தது. கடும் காய்ச்சல். அவதிப்பட்டான். பல கம்பளங்கள் போர்த்தியும் நடுக்கம் நிற்கவில்லை. அந்த ஊரில் உள்ள பெரிய மருத்துவர் ஒருவர் வந்து நாடி பார்த்து, நல்ல மருந்து தந்தார்.

''தேவி, காளியாயீ, மகமாயீ நான் என்ன பிழை செய்தேனோ? அம்மா இந்த வெப்பு நோய் நீக்கிக் குணம் உண்டானால் உன் சந்நிதானத்தில் இரண்டு ஆடுகளை வெட்டிப் பூசைபோடுவேன்'' என்று பூசாரி, பொன்னப்பன் வேண்டிக் கொண்டான்.

மருத்துவர் தந்த மருந்தின் துணையால் படிப்படியாகக் காய்ச்சல் குறைந்தது, சில நாட்களில் பூரண குணம் பெற்றான். எண்ணெயிட்டுக் குளித்தான். எமன் வாயிலிருந்து மீண்டவன்போல் மகிழ்ந்தான்.

ஆடிமாதம் அம்மனுக்குக் காப்புக் கட்டித் திருவிழா நடைபெற்றது. பொன்னப்பப் பூசாரி, இரு ஆட்டுக்குட்டிகளை வாங்கினான். காளிதேவிக்கு அபிஷேகம் செய்தான், பூமாலைகள் சாத்தினான். ஆட்டுக்குட்டிகளை அம்மைக்கு முன் நிறுத்தினான். அவைகளின் மீது மஞ்சள் நீரைத் தெளித்தான், அவை உடம்பைச் சிலுப்பின, அம்பாள் உத்தரவு கொடுத்ததாக நினைத்துக் கொண்டான். கொடுவாள் எடுத்தான். சூதுவாது அறியாது குழந்தைகள் போல் நிற்கின்ற ஆட்டுக்குட்டிகளை கால தூதனைப்போல் அடுத்தான். வாளை ஓங்கி வீசினான்.

அவை, '' அம்மா அம்மா!'' என்று அலறின. துள்ளித்துடித்து வீழ்ந்து மாண்டன, அன்பு வெள்ளம் ஓடவேண்டிய கோயிலில் உதிர வெள்ளம் ஓடியது. இருதலைகளையும் காளியன்னைக்கு முன் வைத்துப் படைத்தான்.

அந்த ஊரில் பொன்னப்பப் பூசாரிக்கு நல்லபேர் அவன் காளிதேவியை விதம் விதமாக அலங்கரிப்பான், கும்பிட வருகிறவர்களை நன்கு உபசரிப்பான். பெரிய உலோபிகளும் கூட அவனுடைய உபசரிப்பில் மயங்கி ஆராதனைத் தட்டில் கண்ணை மூடிக் கொண்டு பணம் போடுவார்கள்.

அந்த நகரத்தில் அரசுபுரிந்த மன்னவனுக்கு ஓர் ஆண்மகவு பிறந்தது. அவ்வாறே மந்திரிக்கும் ஒரு மைந்தன் பிறந்தான். பல ஆண்டுகளாக மகப்பேறு இன்றி மாதவம் செய்த மன்னன் மட்டற்ற மகிழ்ச்சியுற்றான். நகரில் உள்ள எல்லா



ஆலயங்களுக்கும் அபிஷேக ஆராதனைகள் செய்தான் வறியார்க்கு அன்னமும் ஆடையும் வழங்கினான். நகர் முழுவதும் அலங்கரித்துப் புத்திரோற்சவம் கொண்டாடினார்கள்.

அரசன் தன் அருமருந்தன்ன மகனுக்கு மகுட சேகரன் என்று பேர் சூட்டினான். அமைச்சன் தன் மகனுக்கு மதியூகி என்று பேர் சூட்டினான். மகுட சேகரனும் மதியூகியும் சேற்றில் வைத்த வாழைக் கன்றுகளைப் போல் வளமையாக வளர்ந்தார்கள். இளமையில் நல்லாசிரியர்பால் பணிவும் தணிவும் உடையவர்களாய் செல்வரையடுத்த வறியவரைப் போல். அடக்கமாக இருந்து கலை பயின்றார்கள்.

சகல கலைகளிலும் வல்லவர்களாக ஆனார்கள். வல்லவர்கள் மட்டும் அன்று நல்லவர்களாகவும் விளங்கினார்கள். மகுடசேகரனுக்கு இருபத்து நாலாவது வயதில் முடிசூட்டு விழா நடைபெற்றது. தந்தையார் மைந்தனிடம் செங்கோலை யீந்து கூறுவார்.

''மகனே! ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல் மறப்பர் காவலன் காவான் எனின்'' என்ற திருவாக்கை நினைவில் வைத்துக் கொள். எக்காலத்தும் எவ்விடத்தும் ஏழைகளைத் துன்புறுத்தாதே. அல்லல் பட்டாற்றா தழுத கண்ணீரன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை ஏழைகள் அழுத கண்ணீர் வயிர வாளாகி ஒருகோடி செல்வத்தை அழித்துவிடும்.

''அரசாட்சி என்பது, அரசு ஆட்சி மட்டுமன்று அரசனைச் சாட்சி வைத்து செய்தல் வேண்டும். அற ஆட்சி அரசாட்சியாகும். சேய்களைத் தாய் புரப்பது போல் மகனே, நீகுடிகளைப் புரக்க வேண்டும்'' என்று அறிவுரை இனிது கூறித் தந்தை தவவனம் புகுந்தார்.

மகுடசேகரன் மாநிலம் காவல்புரிந்தான். மதியூகி அதியூகியாக இருந்து அவனுக்கு உறுதுணை புரிந்தான்.

பட்டங்கட்டிய பின் பன்னிரு ஆண்டுகளாக வானம் பொழியவில்லை. உண்ணீரும் தண்ணீரும் இன்றி மக்கள் மிக்க துயரமுற்றார்கள். எங்கும் பசி உடற்றியது. பசிபசி யென்று வாடினார்கள், வருந்தினார்கள். மகுடசேகரன் இதனையறிந்து பெரிதும் வருந்தினான். தன் தோழனும் அமைச்சனும் ஆகிய மதியூகியைப் பார்த்துக் கூறுவான்.

''மதியூகி பன்னிரு ஆண்டுகளாக மழையில்லை. மக்கள் படுந்துயருக்கோ ஓர் எல்லையில்லை. உணவு இல்லையே என்ற தொல்லை. பஞ்சப் பேய் கோர தாண்டவம் புரிகின்றது. இதனைக் காணுந்தோறும் என் மனம் அளவற்ற துயரத்தால் வருந்துகின்றது. இதற்கு என்ன செய்யலாம்?

மதியூகி, ''மன்னர் பெருமானே, ஏதோ பெரிய தெய்வக் குற்றம் நேர்ந்துள்ளது. நமது குலதெய்வமாகிய காளிதேவிக்கு வழிபாடு செய்வோம். தேவியின் திருவருள் இருந்தாலன்றி உலகம் நலமடையாது'' என்றான்.

அடுத்த நாள் காலை மன்னனும் மந்திரியும் நீராடி, பூஜைக்குரிய பொருட்களுடன் தேவியின் திருக்கோயிலுக்குச் சென்றார்கள்.

இதை அறிந்து பூசாரி பொன்னப்பன் அஞ்சி நடு நடுங்கினான். மழையில்லாத பிழை குறித்து மன்னர் நம்மைத்தான் தண்டிக்க வருகிறாரோ? என்று நினைத்து ஓடிப்போய்க் காளிதேவிக்குப் பின்புறம் ஒளிந்து கொண்டான்.

மகுடசேகரனும், மதியூகியும் உள்ளே சென்று அம்பிகைக்கு முன் தேங்காய், பழங்களை வைத்து நிவேதித்து, கற்பூரம் ஏற்றினார்கள்.

மன்னர், ''தேவி, பராசக்தி, எம்பிராட்டி, கருணைத் தெய்வமே, எனக்கு முடி சூட்டிய பன்னிரு ஆண்டுகளாக மழையில்லையே? அம்மா, மக்கள் பட்டினித் துன்பத்தால் பரிதவிக்கிறார்கள். உலக மெல்லாம் ஈன்ற அன்னையே, என் பிழை பொறுத்து மழை தந்து மாநிலத்தைக் காக்க வேண்டும்'' என்று கண்ணீர் சொரிந்து, பரிந்து வேண்டினான்.

அப்போது அங்கு அம்பிகையின் அருள்வாக்கு ஒன்று இனிமையாக எழுந்தது. ''அரசகுமாரா, என் சந்நிதியில் ஒரு நரபலி கொடுத்தால் மழை பொழியும்.''

இந்த அருள்வாக்கை அரசன் கேட்டான் '' மதியூகி, அம்பிகையின் அருட்குரலைக் கேட்டாயா? மக்களுக்கு அரசன் தந்தை. நான் மக்களுக்குத் தந்தை யாதலினால் என்னைப் பலி கொடுத்து நீஅரசபதவியிலிருந்து அரசாள்வாய்'' என்றான்.

மதியூகி, ''அரசே, நான் தங்கள் அடிமை, நண்பன். உடுக்கையிழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு என்பது போல் தங்கள் துன்பத்தைக் களைவது என் கடமை. ஆதலால் என்னைப் பலி கொடுத்து விடுங்கள்'' என்றான்.

''இல்லை, நான்தான் பலியாவேன்''

''இல்லை, நான்தான் பலியாவேன்''

இருவருக்கும் இப்படி வாக்குவாதம் நடைபெற்றது. ''தேவி, எம்பிராட்டி, நீசொல் உன் சந்நிதியில் நான் பலியாக வேணுமா? மதியூகி பலியாக வேணுமா?'' என்று கேட்டான் மன்னன்.

''அரசகுமாரா, நீயும் பலியாக வேண்டாம் மந்திரியும் பலியாக வேண்டாம். எனக்குப் பின்னே நிற்கின்ற பூசாரிதான் பலியாக வேண்டும்'' என்ற திருவாக்கு எழுந்தது.

இதைக் கேட்டவுடன் பூசாரி பொன்னப்பன் நடு நடுங்கி விட்டான். வெளியே வந்தான். காளியைப் பார்த்துச் சீறினான்.

''படுபாவி! பத்திரகாளி! உனக்கு மனம் என்ன இரும்பா? கல்லா? உன்னை அறுபது ஆண்டுகளாகப் பூசித்தேனே. அப்படியிருந்தும் என்னைப் பலியிடுமாறு கூறினாயே, உயிர்களுக்கெல்லாம் நீதாயாயிற்றே? நான் மட்டும் தானா உனக்குப் பகை? நான் என்ன பிழை செய்தேன்? இது உனக்குத் தகுமா? தருமமா முறையா?'' என்று கூறி அலறினான்.

காளிதேவி, ''பூசாரியே, என்னை ஏன் வீணே நிந்திக்கின்றாய் வினை விதைத்தவன் வினையறுப்பான். தினைவிதைத்தவன் தினையறுப்பான். நாற்பது ஆண்டுகளுக்கு முன் உணவு மாறுபாட்டால் உனக்குக் காய்ச்சல் வந்து அதற்கு நீமருத்துவரிடம் மருந்து உண்பது தான் முறை. அதை விடுத்து இரு ஆட்டுக்குட்டிகளைக் கொணர்ந்து வெட்டினாய். நீவெட்டிய இரு ஆட்டுக்குட்டிகளும் அரசகுமாரனும் அமைச்சர் குமாரனுமாகப் பிறந்து, வந்திருக்கிறார்கள். எல்லா உயிர்களுக்கும் நான் அன்னையென்று இன்றுதான் உணர்ந்தாயா? ஆடுகளுக்கும் நான் அன்னை தானே? என் குழந்தைகளை என்முன் வெட்டியது என்ன நியாயம்? அந்த ஆட்டுக் குட்டிகள். 'அம்மா, அம்மா' என்று அலறிய அழுகுரல் என் உள்ளத்தை உருக்கியதே, ஆதலால் தெய்வத்தின் மீது பழிசுமத்தி என்ன பயன்? நீசெய்த வினையை நீநுகர்ந்தே தீர வேண்டும்'' என்று அசரீரியாகக் கூறினாள்.

இதைக் கேட்ட பூசாரி பொன்னப்பன் திடுக்கிட்டான். தலையில் அடித்துக் கொண்டான். ''தாயே, அறியாமையால் கெட்டேன். செய்த குற்றத்தை ஒப்புக் கொண்டு தண்டனையை ஏற்றுக் கொள்வது தானே முறை? அரசே, என்னைப் பலி கொடுங்கள்'' என்று கூறித் தேவியின் திருமுன் தலைகுனிந்து நின்றான். மகுடசேகரன் வாளை வீசினான். பூசாரியின் தலைதுண்டாக வீழ்ந்தது.

அப்பொழுது தேவி, ''அரசகுமாரா, இனி மழை பெய்யும். நாட்டில் பஞ்சம் தீரும். வருந்தவேண்டாம். உனக்கு என்ன வரம் வேண்டும்?'' என்று வினவினாள்.

அரசன், ''அம்பிகையே, பூசாரி குற்றத்தை உணர்ந்து கொண்டான், ஒப்புக் கொண்டான். ஆதலால் அவன் பிழையைப் பொறுத்து அவனை எழுப்பியருள வேண்டும்'' என்றான்.

அம்பிகை அருள் புரிந்தாள். பொன்னப்பன் எழுந்தான். ''தாயே, இன்று உயர்ந்தேன், இனி உயிர்க்கொலை செய்யேன். புலையுணவு உண்ணேன். பலி கொடுக்கும் பாதகச் செயலை நான் தடுப்பேன்'' என்றான்.

மழை பொழிந்தது, நாடு தழைத்தது, நலம் விளைந்தது.



## காளி ஆட்டம்

கந்தர் சஷ்டி விழாவில் நடைபெறும் சூரசம்ஹார ஐதீக காட்சிகளின் ஓர் அங்கமாக காளியாட்டம் நிகழும். சூரபத்மனின் தம்பியான அக்னி முகன் காளியை வழிபடுபவன். அவன் முருகனை எதிர்த்துப் போருக்குச் செல்லும்போது துணையாக இருக்க வேண்டுமென்று அவளிடம் வேண்டுகிறான். அவளும் துணையாக வருகிறாள் அவளை வீரபாகு தேவர் வெற்றி கொண்டு ஓட்டினார். காளி வேடம் தரித்தவர் ஆடிக்கொண்டேவந்து மேடையில் வீரவாகு தேவருடன் தர்க்கம் பேசுவது சிறந்த காட்சியாகும்.

# கண்ணப்பர்

**''கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்''**

என்று மாணிக்கவாசகர் கண்ணப்பநாயனாரைப் புகழ்ந்து பாடுகிறார். மண்ணுலகின் ஆடவர்களில் கண்ணப்பர் மிகச்சிறந்தவர் என்ற பொருளில்

**''கலைமலிந்த சீர் நம்பி கண்ணப்பர்க்(கு) அடியேன்''**

எனச்சுந்தர மூர்த்தி சுவாமிகள் பாராட்டுகிறார்.

திருஞானசம்பந்தரோ

**''வாய்கலசமாக வழிபாடுசெயும் வேடன்மலராகுநயனம்
காய்கணையினால் இடந்(து) ஈசன் அடிகூடு காளத்திமலையே''**

என்று கண்ணப்பரின் வழிபாட்டுமுறையையும், கண் இடந்து அப்பிய கதையையும் கூறிப் போற்றுகிறார்.

முற்றும்துறந்த பட்டினத்தடிகளோ

**''நாளாறில் கண்இடந்(து) அப்பவல் லேன்அல்லன்
நான் இனிச்சென்(று)
ஆளாவது எப்படியோ திருக்காளத்தி
அப்பனுக்கே''** என்று பாடுகிறார்

காளத்திப் புராணம் கண்ணப்பர், முற்பிறப்பில் அர்ச்சுனனாகப் பிறந்தார் என்று கூறுகிறது, பாசுபதம் வேண்டித்தவம் செய்த அர்ச்சுனன் வேடர் உருவில் வந்த சிவபெருமானுடன் அவர் சிவன் என அறியாமல் போர் செய்கிறான். பின்னர் அவனுக்குப் பாசுபதக்கணை தந்து நீஎன்னை வேடன் என இகழ்ந்ததால் வேடனாகப் பிறப்பாய், இன்று பன்றி காரணமாக நம்மிடையே போர் நடந்தது. அன்றும் நீ பன்றி காரணமாக காளத்திமலையில் என்னிடம் சேர்வாய் என்று சிவபிரான் அருள் செய்தார் என இப்புராணம் கூறுகிறது.

இக்கருத்தைப் பதினோராவது திருமுறையில் நக்கீரரும் வலியுறுத்துகிறார். சேக்கிழார் பெருமானும் திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில்

**''முன்னமே முனியாகியெனை யடையத்தவ முயன்றான்''**

எனக்குறிப்பால் உணர்த்துகிறார்.

பொத்தப்பி நாட்டின் தலைநகரான உடுப்பூரில் வேடர்குலத்தலைவனான நாகனுக்கும் அவனது மனைவி தத்தை என்பாளுக்கும் மகனாகக் கண்ணப்பர் அவதரித்தார். குழந்தை திண்ணென்று புருமனாய் இருந்ததால் அவருக்குத் திண்ணன் எனப் பெயரிட்டனர்.

திண்ணனார் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து பருவம் அடைந்தார். அவரது தந்தையிடமிருந்து தலைமைப் பொறுப்பை ஏற்றார். பிறகு தந்தையின் கட்டளைப்படி முதல் வேட்டைக்கு நாணனையும் காடனையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டார்.

வேட்டையின்போது ஒரு பன்றியை நெடுந் தொலைவு விரட்டி சென்ற திண்ணனார் தன் சுரிகையை எடுத்து அதைக் குத்திக் கொன்றார். பிறகு நீர் வேட்கையின் காரணமாக பொன்முகலி ஆற்றை நோக்கிச் செல்கிறார்.

உடன்வரும் நாணன் காளத்தி மலையைக் காட்டி இம்மலைமீது குடுமித்தேவர் உள்ளார் என்றான்.

இந்த மலையை நெருங்க நெருங்க என்எலும்பு உருகி உடல் பாரம் குறைவது போன்ற உணர்ச்சி உண்டாகிறது எனத் திண்ணனும் வியந்து கூறுகிறார். இதே உணர்ச்சி இராமனை நெருங்கும் அனுமனுக்கும் ஏற்படுவது இங்கே குறிப்பிடத்தக்கது.

அவ்வாறு செல்லும் போதே இறைவனின் பார்வை அவர்மேல் எய்தியது. அதனால் திண்ணனார் முற்பிறவியின் சார்புகள் அகன்று அன்புருவாக மாறி விட்டார். உடலுக்குள் அன்பு குடி புகுந்திருக்காமல் அவ்வன்பே உடலாக மாறியதை சேக்கிழார்

**''பொங்கிய ஒளியின் நீழல்
பொருவில்அன் புருவம் ஆனார்''**

என்று குறிப்பிடுகிறார். மலைமேல் உள்ள சிவலிங்கத்தைக் கண்ட திண்ணனார் அடியனேற்கு இங்கு இவர் அகப்பட்டார். என மகிழ்ந்து போனார். பிறகு இறைவனுக்கு உணவு கொண்டுவர மலையை விட்டு இறங்கினார்.

மென்று சுவை நன்றாக உள்ள இறைச்சியையும் வாயில் நீரும் கொண்டு திண்ணனார் மீண்டும் இறைவனிடம் வந்தார். சிவலிங்கத்தின் மேல் இருந்த மலர்களைத்தம் காலால் அகற்றி வாய் நீரால் அபிஷேகம் செய்து இறைச்சியை வைத்து

அமுது செய்து அருள வேண்டும் என வேண்டினார்.

இரவு முழுவதும் காவல்காத்து பொழுது புலர்ந்ததும் மீண்டும் உணவு கொண்டுவர திண்ணனார் சென்றார். அவ்விறைவனுக்கு ஆகம வழியில் பூசைசெய்யும் சிவகோசரியார் அங்கு வந்து இறைச்சியும், செருப்படியும் நாய் சுவடு அடையாளங்களும் கண்டு விழுந்து அழுதார்.

பிறகு அவற்றை மாற்றிக் குளித்துவிட்டு வந்து பூசைசெய்தார். இப்படியே நான்கு நாட்கள் நடந்தன.

சிவகோசரியார் ஐந்தாவது நாளில் இறைவனிடம் எம்பெருமானே இத்தீமையை ஒழித்தருள வேண்டும் என விண்ணப்பம் செய்தார். இறைவன் அவர் கனவில் தோன்றி

''அவனுடைய வடிவெல்லாம்
நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம்
நமையறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம்
நமக்கினியவாம் என்றும்
அவனுடைய நிலை இவ்வா றறிநீஎன்
றருள்செய்தார்''

என்று கூறியதாகச் சேக்கிழார் பாடுகிறார்.

ஆறாம்நாள் சிவகோசரியார் மறைந்து இருந்து பார்க்கத் திண்ணார் வழக்கம் போல் வருகிறார். வந்தவர் சிவபெருமானின் வலக்கண்ணில் உதிரம் வருவதைக் கண்டு அலறினார், மயங்கி வீழ்ந்தார், எழுந்தார், உதிரத்தை நிறுத்த முயன்றார் பலன் இல்லை.

திண்ணனாருக்கு ஊனுக்கு ஊன் மருந்து எனவேடர் சொல்வது நினைவுக்கு வந்தது. உடனே தன் வலக்கண்ணைச் சரத்தினால் பெயர்த்தெடுத்துச் சுவாமியின் திருக்கண்ணில் அப்பினார். குருதி நின்றது. திண்ணனார் மகிழ்ச்சியால் குதித்தார்.


திண்ணனின் அன்பைச் சிவகோசரியார்க்கு மேலும் காட்ட விரும்பிய இறைவன் அற்போது தம் இடக்கண்ணில் உதிரம் பெருகுமாறு செய்தார். அப்போது திண்ணன் மனம் வருந்ினாலும் எனக்கு இன்னும் ஒருகண் இருக்கிறதே என மகிழ்ந்தார்.

அக்கண்ணையும் எடுத்துவிட்டால் இறைவன் திருக்கண் இருக்கும் இடம் தெரியாதே எனச் சிந்தித்து திண்ணனார் தம் இடக்காலைக் கடவுளின் கண்ணுக்கு அருகில் ஊன்றிக் கொண்டு ஒரு தனிப் பகழியினால் தனது மற்றோர் கண்ணைப் பெயர்க்க ஊன்றினார்.

உடனே இறைவன் திண்ணனார் கைகளைத் தம் திருக்கையால் பிடித்துக் கொண்டு நில்லு கண்ணப்ப என மும்முறை கூறித் தடுத்து அருளினார். இதனைச் சிவகோசரியார் கண்ணுற்றார்.


மறைகள் ஒலிக்க வானவர் பூ மழை பொழிந்தனர். கண்ணப்பரை சிவபெருமான் என்வலத்தில் மாறுபாடிலாது நிற்க எனக் கூறித்திருவருள் புரிந்தார்.

இன்றைக்கும் காளஹஸ்தியில் சிவன் கோவிலில் கண்ணப்பருக்குத் தனியாகக் கோயில் அமைக்கப்பட்டிருப்பது கண்ணப்ப நாயனாருடைய உள்ளத்தின் அன்பைப் பறை சாற்றி நிற்கிறது.



# உலகம் உய்ய உதித்த உடையவர்

பெ.ராமநாதபிள்ளை, செயல் அலுவலர்,
திருமூர்த்திமலை உடுமலை வட்டம்.



ஸ்ரீ வரதராஜப் பெருமாள் அருளினால் ஸ்ரீ ராமானுஜருக்கு நல்லதொரு மடத்தைத் திருக்கச்சி நம்பிகள் ஏற்படுத்திக் கொடுத்தார். உத்தமரான வைஷ்ணவர்கள் எதிராஜராகிய ராமானுஜருக்குத் தொண்டுசெய்ய சீடர்கள் ஆயினார்கள். ஸ்ரீராமானுஜரும் எல்லா மக்களையும் வசீகரித்து ஆசி அளித்து அவர்களைத் தொண்டில் ஈடுபடும்படி செய்து, வரதராஜப் பெருமாள் அருளினால் திருக்கச்சிநம்பி அளித்த திருமடத்தில் வாழ்ந்து வந்தார்.

ஸ்ரீராமானுஜர் ஸ்ரீவரதராஜப் பெருமாளால் எதிராஜன் என்று திருநாமம் இடப்பட்டு சீடர்களுடன் வாழ்ந்து வருகையில் அவருடைய சீடர்களில் மிகமுக்கியமானவராக முதலியாண்டான் என்பவர்தலைமைச்சீடராக இருந்தார். இவர் கி.பி. 1027ல் பூவிருந்த வல்லி என்ற ஊருக்கும் திருமழிசைஎன்ற ஊருக்கும் இடையே உள்ள புருஷமங்கலம் வரதராஜபுரம் என்னும் பட்சபெருமாள் கோவிலில் சித்திரை மாதம் புனர்பூசம் நட்சத்திரத்தில் ஆனந்த தீட்சிதர் என்ற மகானுக்கும் ஸ்ரீராமானுஜரின் சகோதரியான நாச்சியார் அம்மைக்கும் யஜீஷ் சாகையில் ஆபஸ்தம்ப சூத்திரத்தில் வாதுல கோத்திரத்தில் பரதனின் அம்சமாய் அவதரித்தார். இவருடைய இயற்பெயர் தாசரதி என்பதாகும். எதிராஜனின் சீடர்களுக்கு தலைமையாக இருந்ததால் இவர் முதலியாண்டான் என்று அழைக்கப்பட்டார்.

முதலியாண்டானை எதிராஜர் தம்முடைய திரிதண்டமாகவே அபிமானித்தார். ஒரு சமயம் எதிராஜர் தன் சீடர்களுடன் உரையாடும் போது ''நம் திரிதண்டத்தை விடில் அன்றோ முதலியாண்டானை விடுவது'' என்றார் இதுவே முதலியாண்டனின் சிறப்பைக் காட்டுகிறது. இவருக்கு கந்தாடை ஆண்டான் என்ற குமாரர் உண்டு. ஸ்ரீரங்கத்திலும் ஸ்ரீ பெரும்புதூரிலும் எதிராஜரின் திருஉருவ மேனியை பிரதிஷ்டை செய்தார். இவருடைய குமாரரே கந்தாடை தோழப்பர், முதலியாண்டாருடைய பிரபந்தம் ''ரகசியத்ரையம்'' என்பதாகும். இவர் 105 ஆண்டுகள் வாழ்ந்த மகான்.

ராமானுஜர் சன்னியாசஆசிரமம் அமைத்ததைக் கேள்விபட்ட முதலியாண்டான் ராமானுஜர் திருமடத்தை அடைந்து அவரைப் போற்றினார்.

**''சீரும் மாறன் முன்னம் செப்பிய**
**தமிழ்வேதத்துக்(கு)**
**ஆரதி காரி நீயே அன்றியும் ஒருவர்**
**உண்டோ**
**பார்மிசைமுன்னம் தோன்றும் பத்தரில்**
**பின்னு மண்ணில்**
**நேர்பெறத் தோன்று வாரில் நின்னையே**
**அனையாய் அன்றி''.**

(ஸ்ரீராமானுஜ வைபவம்) பாடல் - 180

உடனே ராமானுஜரும் என் உயிர் போன்றவனே என் அருகில் இருப்பாயாக என்று வாழ்த்தி முதலியாண்டானை தன் அருகில் அமர்த்திக்கொண்டார். எதிராஜர் திருமடம் அமைத்து தவநெறியில் வாழ்ந்து வருவதை அறிந்தார் ஸ்ரீகூரத்தாழ்வார்.

இவர் கி.பி.1009-ம் ஆண்டு சௌமிய வருடம் தை மாதம் அஸ்த நட்சத்திரத்தில் கிருஷ்ணபட்சபஞ்சமி திதியில் வியாழக்கிழமை அனந்தர் என்று பெயருடன் அவருடைய தேவியான பெருந்தேவி நாயகிக்கும் யாஜீஷ் சாகையில் ஆபஸ்தம்ப சூத்திரத்தில் ஹாரீத கோத்திரத்தில் ஸ்ரீ காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள கூரம் என்னும் திருநகரில் ஸ்ரீராமானுஜருடைய அம்சமாய் அவதரித்தார். இவருடைய இயற்பெயர் ஸ்ரீ வத்ஸாங்கர். கூரத்தாழ்வாரின் மனைவியின் பெயர் ஸ்ரீ ஆண்டாள். இவருக்கு ஸ்ரீரங்கநாதர் அருளால் ஸ்ரீபராசரபட்டர், ஸ்ரீவேதவியாசபட்டர் என்கிற ஸ்ரீராமபிள்ளை என்று இரண்டு பிள்ளைகள். நாலூரானும் திருவரங்கத்து அமுதனாரும் இவருடைய சீடர்களாவர். இவர் ஆக்கிய நூல்கள் வரதராஜ ஸ்தவம், சுந்தபாஹுஸ்தவம், அதிமானுஷ ஸ்தவம், ஸ்ரீ வைகுண்ட ஸ்தவம், ஸ்ரீ ஸ்தவம், யமக

ரத்நாகரம், கத்யத்ரய வ்யாக்யாநம் என்பவையாம். இவருக்கு கூரேசர், கூரத்தாழ்வான், கூராதிபர், கூராதிபதி, கூரநாதர், ஸ்ரீவத்ஸாங்கர் முதலிய இதர திருநாமங்களுண்டாம்.

இவர் ராமானுஜருக்காகத் தன் தரிசனத்தை கிருமி கண்ட சோழனால் இழந்தவர். திருப்பாவையில் வரும் இளம்சிங்கம் என்ற பதத்திற்கு சிங்கக்குருகு என்ற அர்த்தம் சாதித்தவர். விலங்கின் குட்டிக்கு கன்று என்றும், பறவையின் குஞ்சுக்கு குருகு என்றும் பெயர். எம்பெருமானாகிய இளஞ்சிங்கம், பறவை போல மேல் எழும்பிப்பாயும் சிங்கக்குட்டி என்பதால் சிங்கக்குருகு என்பராம் கூரத்தாழ்வார். ஸ்ரீ முதலியாண்டான் சங்கின் அம்சமாகவும் கூரத்தாழ்வார் சக்கரத்தின் அம்சமும் ஆவார். எதிராஜர்கூரத்தாழ்வானை தனது யக்ஞோ பவீதமாய் இருப்பவர் என்றும் கூறுவார்.

ஸ்ரீராமானுஜர் முதலியாண்டானுக்கும் கூரத்தாழ்வாருக்கும் வேதங்களை உபதேசித்து காஞ்சிபுரத்தில் வாழ்ந்து வந்தார். கூரத்தாழ்வார் முதலியாண்டானை பற்றி சொல்லும் பொழுது

இளையாழ்வார் சன்னியாசம் வாங்கும் பொழுது முதலியாண்டானைத் தவிர அனைத்து பந்தத்தையும் விட்டோம் என்று சொல்லியும் என்று சொல்லி இருப்பது. முதலியாண்டானின் மேன்மையைக் காட்டுகிறது என்றும் முதலியாண்டானுக்கு ஒப்பானவர் யாரும் இல்லை என்றும் கூறுவார். இவ்வாறு எதிராஜன் தம் சீடர்களோடு ஸ்ரீகாஞ்சிபுரத்தில் வாழ்ந்து வரும் நாளில் யாதவப்பிரகாசர் அதாவது (ராமானுஜரின் ஆச்சாரியராக இருந்தவர்) ராமானுஜரின் திருமடத்திற்கு வந்தார். இவர் தன் தாயின் அறிவுரை ஆகிய ''மகனே உன் பாவங்களையும் கர்ம வினைகளையும் போக்குவதற்கு எதிராஜரை பக்தியுடன் அடிபணிந்து வணங்கு அது சகல பாவங்களும் நீக்கும்'' என்ற சொற்படி ராமானுஜரிடம் வந்தார், வந்தவர் எதிராஜனை நோக்கி சங்கம், சக்கரம், ஊர்த்துவ புண்டரம் ஆகியவற்றை அணிந்துள்ளீர். குணமற்ற பிரம்மத்தை குணமுடையுதாகக் கூறுகிறீர், இதற்கு சாஸ்திரங்களில் பிரமாணம் இல்லை அப்படி இருந்தால் கூறும் எனக் கேள்விகேட்டார். உடனே எதிராஜர் தன் சீடனாகிய கூரத்தாழ்வாரை நோக்கிப் புன்னகை செய்தார். கூரத்தாழ்வார் வேதங்களில் இருந்தும், உபநிடதங்களில் இருந்தும், இதிகாசங்களிலிருந்தும் பிரம்மத்தின் குணமுள்ள தன்மையை எடுத்துரைத்தார். கூரத்தாழ்வாரின் விளக்கத்தைக் கேட்டு அவரை அடி பணிந்து எதிராஜரின் கருணைக்கு ஆளானார் யாதவப்பிரகாசர். அன்று இரவு ஸ்ரீவரதராஜப்பெருமாள் யாதவப்பிரகாசர் கனவில் தோன்றி ''எதிராஜரை சரண் அடைவாயாக, அப்போது தான் மோட்சம் ஏற்படும்'' என்று கூறி மறைந்தார்.

விழித்து எழுந்ததும் தான் கண்ட கனவைப்பற்றி தாயிடம் கூறினார். அவரின் தாயாரும் எதிராஜரை பணியும்படி வேண்டிக் கொண்டார். இருக்கினும் மனச்சஞ்சலம் தீராத யாதவப்பிரகாசர் திருக்கச்சி நம்பிகளை அணுகி தன்னுடைய சந்தேகங்களுக்கு பெருமாளிடம் விடை கேட்டு தனக்கு தெரிவிக்க வேண்டும் என்று வேண்டினார்.

திருக்கச்சி நம்பிகளும் அதற்கு உடன்பட்டு பெருமாளிடம் விண்ணப்பம் செய்தார். பெருமாளும் திருக்கச்சி நம்பியிடம் ''நம்பியே யாதவப்பிரகாசர் தன் தாய் சொல்லியும் தெளிவு பெறவில்லை. கூரத்தாழ்வார் வேதவேதாந்த சாஸ்திரங்களிலிருந்து சொல்லியும், நான் கனவில் சென்று சொல்லியும் அப்பொழுதும் தெளியவில்லை என்றும் யாதவபிரகாசர் தன்னைத்தானே வஞ்சித்துக் கொள்கிறார் என்றும் கூறி உடனே யாதவபிரகாசர் எதிராஜரை அடிபணிய வேண்டும்'' என்று கூறினார். நடந்ததை அப்படியே யாதவபிரகாசரிடம் திருக்கச்சி நம்பிகள் சொன்னார். மனம் தெளிவு பெற்ற யாதவபிரகாசர் எதிராஜர் திருமடத்திற்கு சென்று அடியேன் பிழைகள் அனைத்தும் பொறுத்து கருணை கொண்டு மன்னித்து கைதூக்கிக் கரை சேர்த்திட வேண்டும் என்று வேண்டினார்.

ஸ்ரீராமானுஜரும் யாதவப்பிரகாசரை அன்புடன் நோக்கி ஸ்ரீவரதராஜப்பெருமாளின் பரிபூரணக் கருணை உமக்கு கிடைத்துள்ளது. வருந்த வேண்டாம் என்று கூறி ஆட்கொண்டார். அத்துவைத வேதாந்தியான யாதவருக்கு உபநயனம் முதலிய எல்லா சம்பிருதாயங்களையும் முடித்துச் சன்னியாசம் அளித்தார்.

யாதவபிரகாசரும் ராமானுஜரின் அருளால் கோவிந்ததாசர் என்று தாசதிருநாமம் பெற்றார். தன்னுடைய முந்திய பாவம் தீரும் பொருட்டு ''எதிதர்ம சமுச்சயம்'' என்ற நூலை இயற்றினார். சிறிது காலம் எதிராஜனுடன் வாழ்ந்தார் தன்னுடைய சீடருக்கே சீடனாக மாறிய யாதவபிரகாசர் ராமானுஜரின் திருவருளால் ஆச்சார்ய அனுக்கிரகம் பெற்றுத் திருநாடு அலங்கரித்தார்.

# திருமங்கையாழ்வார் அருளிய திருவெழு கூற்றிருக்கை

## (உரை)

முன்னுரை - சைவத் திருமுறைகளுள் 'திருவெழு கூற்றிருக்கை' என்னும் சித்திரகவியினைத் திருஞானசம்பந்தர் அருளிச் செய்திருப்பது போன்று. வைஷ்ணவத்தில் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின்கண் திருமங்கையாழ்வார் அருளிச் செய்துள்ளார். இவர்க்குக் கலியன், கலிகன்றி, பரகாலன், ஆலிநாடன், மங்கைவேந்தன் எனப் பல பெயர்கள் வழங்கும். இவர் திருவாலித் திருநகரியைச் சேர்ந்த திருக்குறையலூரில், கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நன்னாளில் அவதரித்தார். இவர் அருளிச் செய்துள்ள பிரபந்தங்கள் ஆறு. அவை முறையே பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல், திருநெடுந்தாண்டகம் என்பனவாம்.

**''மாறன் பணித்த தமிழ்மறைக்கு மங்கையர்கோன்**

**ஆறங்கம் கூற அவதரித்தார்''**

என்று மணவாள மாமுனிகள், இப்பிரபந்தங்களின் சிறப்பினைப் புகழ்ந்து போற்றியுள்ளார்.

திருமங்கையாழ்வார் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நான்கு வகையான கவிகளிலும் வல்லவர். இவர்தம் கவித்திறம் ''சதுஷ்கவி ப்ரதா நாய பரகாலாய மங்களம்'' என்பதனால் இனிது விளங்கும். இங்ஙனம்நால்வகைக் கவிகளிலும் வல்லவரான பரகாலர் பாடிய ''திருவெழு கூற்றிருக்கை'' என்னும் சித்திர கவியின் பொருளை, இவ்விதழில் சிறிது ஆராய்ந்து மகிழ்வோம்.

ஒருபேர் உந்தி இருமலர்த் தவிசில்
ஒருமுறை அயனை ஈன்றனை ஒருமுறை
இருசுடர் மீதினில் இயங்கா மும்மதில்
இலங்கை இருகால் வளைய ஒருசிலை


ஒன்றிய ஈரெயிற்று அழல்வாய் வாளியின்
அட்டனை மூவடி நானிலம் வேண்டி
முப்புரி நூலோடு மான்உரி இலங்கும்
மார்பினில், இருபிறப்பு ஒருமாண் ஆகி,
ஒருமுறை ஈரடி மூவுலகு அளந்தனை

நாற்றிசை நடுங்க அஞ்சிறைப் பறவை
ஏறி, நால்வாய் மும்மதத்து இருசெவி
ஒருதனி வேழத்து அரந்தையை, ஒருநாள்
இருநீர் மடுவுள் தீர்த்தனை முத்தீ
நான்மறை ஐவகை வேள்வி, அறுதொழில்

அந்தணர் வணங்கும் தன்மையை ஐம்புலன்
அகத்தினுள் செறுத்து, நான்குடன் அடக்கி,
முக்குணத்து இரண்டவை அகற்றி, ஒன்றினில்
ஒன்றி நின்று ஆங்கு, இருபிறப்பு அறுப்போர்
அறியும் தன்மையை முக்கண் நாற்றோள்

ஐவாய் அரவோடு ஆறுபொதி சடையோன்
அறிவரும் தன்மைப் பெருமையுள் நின்றனை
ஏழுலகு எயிற்றினில் கொண்டனை கூறிய
அறுசுவைப் பயனும் ஆயினை சுடர்விடும்
ஐம்படை அங்கையுள் அமர்ந்தனை சுந்தர

நாற்றோள் முந்நீர் வண்ண, நீன் ஈரடி
ஒன்றிய மனத்தால், ஒருமதி முகத்து
மங்கையர் இருவரும் மலர்அன மங்கையில்
முப்பொழுதும் வருட அறிதுயில் அமர்ந்தனை
அறிமுறை நால்வகை வருணமும் ஆயின





மேதகும் ஐம்பெரும் பூதமும் நீயே
அறுபதம் முரலும் கூந்தல் காரணம்
ஏழ்விடை அடங்கச் செற்றனை அறுவகை
சமயமும் அறிவரும் நிலையினை ஐம்பால்
ஓதியை ஆகத்து இருத்தினை அறமுதல்

நான்கு அவையாய், மூர்த்தி மூன்றாய்,
இருவகைப் பயனாய், ஒன்றாய் விரிந்து
நின்றனை குன்றா மதுமலர்ச் சோலை
வண்கொடிப் படப்பை, வருபுனற் பொன்னி
மாமணி அலைக்கும் செந்நெல்ஒண் கழனித்

திகழ்வனம் உடுத்த, கற்போர்ப் புரிசைக்
கனக மாளிகை நிமிர்கொடி விசும்பில்
இளம்பிறை துவக்கும், செல்வம் மல்குதென்
குடந்தை, அந்தணர் மந்திர மொழியுடன்
வணங்க ஆடரவு அமளியில் அறிதுயில்

அமர்ந்த பரம, நின் அடியிணை பணிவன்
இடர் அகல மாற்றோ வினையே

திருவெழு கூற்றிருக்கை (உரை)

ஒரு பேர் - ஒப்பற்ற பெரிய

உந்தி - திருநாபியில் தோன்றிய

இருமலர்த் தவிசில் - பெரிய தாமரைப்பூ ஆகிய ஆசனத்தில்

ஒருமுறை அயனை ஈன்றனை - ஒரு காலத்தில் பிரமனைப் படைத்தருளினாய்.

ஒருமுறை - முன் ஒரு காலத்தில்

இருசுடர் - சந்திரனும் சூரியனும் ஆகிய இரண்டு சுடர்கள்

மீதினில் இயங்கா - மேலே உலவ முடியாத

மும்மதில் - நீர் அரண், மலையரண், காட்டரண் என்னும் மூன்று மதில்களையுடைய

இலங்கை - இலங்கை மா நகரினை

இருகால் வளைய - இரண்டு நுனிகளும் வளையும்படி

ஒருசிலை - ஒப்பற்ற கோதண்டம் என்னும் வில்வில்

ஒன்றிய ஈர் எயிற்று - பொருந்திய இரண்டு பற்களையுடைய

அழல் வாய் - நெருப்பைக் கக்குகின்ற வாயையுடைய

வாளியின் அட்டனை - அம்பினால் அழித்தருளினாய்.

மூஅடி - மூன்று அடியளவு

நானிலம் வேண்டி - பூமியை விரும்பு

முப்புரி நூலொடு - மூன்று புரிகளாக அமைந்த பூணூலுடன்

மான் உரி இலங்கும் - மானின் தோல் விளங்குகின்ற

மார்பினில் - திருமார்பினையுடைய

இருபிறப்பு ஒருமாண் ஆகி - ஒப்பற்ற பிராம்மணப் பிரம்மச்சாரியாக வடிவெடுத்து

ஒருமுறை - ஒரு காலத்தில்

ஈர் அடி - இரண்டு திருவடிகளாலே

மூவுலகு அளந்தனை - மூன்று உலகங்களையும் அளந்து கொண்டாய்.

நாற்றிசைநடுங்க - நான்கு திசையிலும் உள்ளவர்கள் நடுங்கும்படி

அஞ்சிறைப் பறவை ஏறி - அழகிய சிறகையுடைய கருடன்மேல் ஏறிக்கொண்டு வந்து

மும்மதம் - கன்னமதம் கபோலமதம் பீஜமதம் என்னும் மூன்று மதங்களையும்

இருசெவி - முறம்போன்ற இரண்டு செவிகளையும் உடைய

ஒருதனி வேழத்து - ஒப்பற்ற சிறந்த யானையாகிய கஜேந்திரனின்

அரந்தையை - துன்பத்தை

ஒருநாள் - முன்னொரு காலத்தில்

இருநீர் மடுவுள் தீர்த்தனை - பெரிய நீரையுடைய மடுவின்கண் போக்கியருளினாய்.

முத்தீ - ஆகவநீயம், தட்சிணாக்கினி, காருகபத்தியம் என்னும் மூன்று நெருப்புகளையும்

நான்மறை - இருக்கு, யசூர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களையும் ஐவகை வேள்வி - பிரதமவேள்வி தேவவேள்வி பூதவேள்வி பிதிர்வேள்வி மனிதவேள்வி என்னும் ஐந்து வகையான வேள்விகளையும்

அறுதொழில் - ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல், என்னும் ஆறு வகையான தொழில்களையும் உடைய

அந்தணர் வணங்கும் தன்மையை - அழகிய தன்மை வாய்ந்த சான்றோர்கள் வணங்குகின்ற சிறப்பினைப் பெற்றுள்ளாய்.

ஐம்புலன் -மெய், வாய், கண், மூக்கு, செவி, என்னும் ஐந்து பொறிகளையும்.

அகத்தே செறுத்து - வெளியே செல்ல விடாமல் இறைவனையே நினைந்து உள்ளே அடக்கி வைத்து

நான்கு உடன் அடக்கி - உண்ணுதல், உறங்குதல், அங்காத்தல், நுகர்தல், என்னும் தொழில்களையும் ஒரு பொருட்டாக மதியாமல் விலக்கித் தள்ளி முக்குணத்து- சத்துவம், இராசதம், தாமதம், என்னும் மூன்று குணங்களிலே

இரண்டு அவை அகற்றி - இராசதம் தாமதம் என்னும் இருகுணங்களையும் நீக்கி

ஒன்றினில் - சத்துவம் ஆகிய ஒரு குணத்திலேயே

ஒன்றி நின்று . பொருந்தியிருந்து

ஆங்கு - அத்தகைய நிலையின் பயனாக

இருபிறப்பு அறுப்போர் - நல்வினை தீவினை என்னும் இரண்டினாலும் வரும் உலகியல் வாழ்வு ஆகிய பற்றினை அறுத்துக் கொள்ளுகின்ற பெரியோர்களாலே மட்டும்

அறியும் தன்மையை - அறிந்து கொள்ளத்தக்க பெருமையினைக் கொண்டுள்ளாய்.

முக்கண் - மூன்று கண்களையும்

நால் தோள் - நான்கு தோள்களையும்

ஐவாய் அரவோடு - ஐந்து வாய்களையுடைய பாம்பையும்

ஆறு பொதி சடையோன் . கங்கையாறு தங்கியுள்ள சடையினையும் உடைய சிவபெருமான்

அறிவரிய - அறிவதற்கு அரிய

தன்மைப் பெருமையுள் நின்றனை - இயல்புடைமை ஆகிய பெருமையிலே விளங்குகின்றாய்.

ஏழ் உலகு - நாவலந்தீவு இறலீத்தீவு குசைத்தீவு கிரவுஞ்சத்தீ சான்மலித்தீவு தெங்கின்தீவு புட்கரத்தீவு என்னும் எல்லா உலகங்களையும்

எயிற்றில் கொண்டனை - வராக அவதார காலத்தில் பற்களாகிய கோட்டின் கண் எடுத்துக் கொண்டு காப்பாற்றினாய்

கூறிய - புகழ்ந்து சொல்லப்பெற்ற

அறுசுவைப் பயனும் ஆயினை - உவர்ப்பு, புளிப்பு, துவர்ப்பு, இனிப்பு, கார்ப்பு, கைப்பு, என்னும் ஆறுசுவைகள் ஆகிய பயன் ஆகவும் திகழ்கின்றாய்.

சுடர் விடும் - ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்ற

ஐம்படை - சங்கு, சக்கரம், கதை, வில், வாள், என்னும் ஐந்து ஆயுதங்களையும்

அமர்ந்தனை - விரும்பி ஏந்தியிருக்கின்றாய்.

சுந்தர நால் தோள் - அழகு மிக்க நன்கு தோள்களையும்

முந்நீர் வண்ண - ஆற்றுநீர், ஊற்றுநீர், என்னும் மூன்று நீர்களையம் கொண்ட கடல் போன்ற நீல நிறத்தை யுடையவனே

நின்ஈர் அடி - நின்னுடைய இரண்டு திருவடிகளையும்

ஒன்றிய மனத்தால் - ஒருமைப்பட்டு நிற்கும் மனத்துடன்

ஒரு மதி முகத்து - ஒப்பற்ற சந்திரனைப் போன்ற அழகிய முகத்தையுடைய

மங்கையர் இருவரும் - திருமகள் நிலமகள் ஆகிய இருவரும்

மலர் அன அங்கையின் - பூப் போன்று மெல்லிய அழகிய கைகளாலே

முப்பொழுதும் - காலை மாலை நடுப்போது என்னும் மூன்று வேளைகளிலும்

வருட - இசைவாகப் பிடித்து வருடுதல் செய்ய

அறிதுயில் அமர்ந்தனை - இன்பமாக யோக நித்திரை புரிகின்றாய்

நெறிமுறை - உலகியல் ஒழுங்கு முறைகளுக்கு ஏற்ப

நால்வகை வருணமும் ஆயினை - அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், என்னும் நான்கு வகையான பாகுபாடுகளையும் அமைத்துவைத்து நடத்துகின்றாய்

மேதரும் - மேன்மை பொருந்திய

ஐம்பெரும் பூதமும் நீயே - நிலம், நீர், தீ, வளி, விசும்பு, என்னும் ஐந்து பெரிய முதற்பொருள்களையும் நீயே இயக்குகின்றாய்.

ஆறுபதம் முரலும் - ஆறு கால்களையுடைய வண்டுகள் மொய்த்து ஒலிக்கின்ற

கூந்தல் காரணம் - அழகிய கூந்தலையுடைய நப்பின்னையின் காரணமாக

ஏழ் விடை - ஏழு காளை மாடுகளையும்

அடங்கச் செற்றனை - அடங்கும்படி செய்து வலிமைகெடுமாறு நெரித்தருளினாய்.

அறு வகைச் சமயமும் - நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், மீமாஞ்சை, வேதாந்தம், என்று பலவாறாகச் சொல்லப்படும் ஆறுவகையான சமயங்கள் எல்லாம்

அறிவு அரும் நிலையினை - அறிந்து கொள்ளுதற்கு இயலாத அரிய நிலையில் வைகித் திகழ்கின்றாய்.

ஐம்பால் ஓதியை - மென்மை, தன்மை, நறுமை, கருமை, நீட்சி, என்னும் ஐந்து வகையான இயல்புகளும் அமைந்த கூந்தலையுடைய திருமகளை

ஆகத்து இருத்தினை - மார்பின்கண் தரித்துக் கொண்டு இருக்கின்றாய்.

அறம் முதல் நான்கு அவையாய் - அறம் பொருள் இன்பம் வீடுபேறு என்னும் நான்கு உறுதிப் பொருள்களையும் வழங்குபவனாய்

மூன்று மூர்த்தியாய் - படைத்தல்! காத்தல்! அழித்தல்! என்னும் மூன்று தொழில்களையும் செய்கின்ற மும்மூர்த்திகளின் வடிவமாய்

இருவகைப் பயனாய் - இன்பம் துன்பம் என்னும் இருவகையான பயன்களையும் அவரவர் வினைகளுக்கு ஏற்பத் தருபவனாய்

ஒன்றாய் விரிந்து நின்றனை - ஒரே முழுமுதற் பரம் பொருளாக இருந்தும் உலகம் முழுவதிலும் பரவி நீக்கமற நிறைந்து நிற்கின்றாய்.

குன்றா மதுமலர்ச் சோலை - குறையாத தேன்துளிகளையுடைய பூக்கள் நிறைந்த சோலைகளையும் வண் கொடிப் படப்பை - வளப்பம் நிறைந்த பலவகைக் கொடிகளையுடைய தோட்டங்களையும்,

வருபுனற் பொன்னி - பெருகி வருகின்ற நீரையுடைய காவிரியாறானது

மாமணி அலைக்கும் - சிறந்த மாணிக்கங்களை அலையெறிந்து கரையிற் கொழிக்கப் பெறுகின்ற

செந்நெல் ஒண்கழனி - செந்நெற் பயிர்களாலே சிறப்புப் பெற்ற வயல்களையும் உடையதாய்,

திகழ்வனம் உடுத்த - விளங்குகின்ற அழகிய தோப்புக்களை நாற்புறமும் உடைபோல அணிந்திருக்கின்ற,

கற்போர் புரிசை - கற்றுவல்ல புலவர்களுடைய நகரமாகச் செய்து அமைக்கப் பெற்றதும்.

கனக மாளிகை நிமிர்கொடி - பொன்மயம் ஆகிய மாட மாளிகைகளின் மேலே

நிமிர்ந்து ஓங்கியுயர்ந்துள்ள கொடிகள்

விசும்பில் இளம்பிறை துவக்கும் - வானத்தின்கண் உள்ள மூன்றாம் பிறைச் சந்திரனைத் தொட்டுக் கொண்டிருப்பதும் ஆகிய

செல்வம் மல்கு தென் திருக்குடந்தை - நீர்வளம் நிலவளம் முதலிய செல்வங்கள் பலவும் நிறைந்து தெற்கேயுள்ள அழகிய திருக்குடந்தை என்னும் தலத்தின்கண்

அந்தணர் - பிராம்மணர்கள்

மந்திர மொழியுடன் - வேத மந்திரங்களைக் கூறிக் கொண்டு

வணங்க - வழிபட்டு மகிழும்படி

ஆடு அரவு அமளியில் - படம் எடுத்து ஆடுகின்ற ஆகிசேடன் ஆகிய படுக்கையில்

அறிதுயில் அமர்ந்த - யோகநித்திரை செய்தலை விரும்பிய

பரம - மேலான முழுமுதற் பொருளே

வரும் இடர் அகல - இவ்வுலகியல் வாழ்வில் வரக்கூடிய எல்லாத் துன்பங்களும் நீங்கும்படி

நின் அடி இணை பணிவன் - நினது திருவடிகள் இரண்டையும் பணிந்து வணங்குகின்றேன்

வினை மாற்று - என்னுடைய தீவினைகளைப் போக்கியருள்க.

சீரார் திருவெழு கூற்றிருக்கை என்னும் செந்தமிழால்
ஆரா அமுதன் குடந்தைப் பிரான்றன் அடியிணைக்கீழ்
ஏரார் மறைப்பொருள் எல்லாம் எடுத்திவ் வுலகுய்யவே
சோராமற் சொன்ன அருள்மாரி பாதம் துணைநமக்கே.

- உடையவர் அருளிய தனியன்.

# அருள்மிகு நரசிம்ம சுவாமி திருக்கோயில் மற்றும் ஸ்ரீஅருள்மிகு ஆஞ்சநேயர் திருக்கோயில்

## நாமக்கல்

**திருக்கோயில் வரலாறு**

நாமகிரி என்ற சிறப்புமிக்க நாமக்கல் நகரில் அமைந்திருக்கும் இத்திருத்தலம் தேசிய நெடுஞ்சாலை எண் 7-இல் சேலம் நகரில் இருந்து திருச்சி செல்லும் வழியில் ஐம்பது கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. கி.பி.எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அதியேந்திரன் குணசீலன் என்ற அரசரால் குடையப்பட்ட (கல்வெட்டுக்கள் உள்ள) இரண்டு குடைவரைக் கோயில்கள் இந்நகரில் உள்ளன. இந்த நகரின் நடுநாயகமாய்த் திகழும் நாமகிரி என்னும் சாளக்கிராம பர்வத மலையில் கீழ்ப்புறம் அருள்மிகு அரங்கநாதர், கார்க்கோடகன் மீது சயனத்தில் காட்சியளிக்கிறார். மலையின் மேற்புறம் அருள்மிகு நரசிம்மசுவாமி அமர்ந்த நிலையில் காட்சியளிக்கிறார். இங்கு நரசிம்மருடன் விளங்கும் ஸ்ரீ வைகுண்ட நாராயணர், ஹிரண்ய சம்ஹாரமூர்த்தி வாமன அவதாரம் ஸ்ரீவராகமூர்த்தி ஆகிய திருவுருவங்களும் அற்புத சிற்ப வேலைபாடுகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைக்கப்பட்டுள்ளன.



**நாமகிரியம்மனின் பெருமை**

நாமக்கல் நகரில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் மூர்த்திகள் ஒவ்வொன்றும் அளவிடற்கரிய மிகச் சிறப்பு வாய்ந்தது. ஆயினும் ஸ்ரீ நாமகிரி அன்னையின் பெருமை மிக அதிவிசேஷமானது. ஸ்ரீ நாமகிரியம்மன் தன்னை அண்டியபக்தர்களை கருணையுடன் நோக்கி எதிரில் நின்று பேசுவது போல் தோற்றமளிக்கும் சிறப்பு அம்சம் பொருந்திய தெய்வமாகக் கொண்டாடப்படுகிறாள்.

இந்த ஆலயத்தில் இருக்கும் ஸ்ரீ நரசிம்ம தீர்த்தம் எனும் புஷ்கரிணியில் காலை மாலை இரு வேளைகளிலும் பக்தியுடன் நீராடி ஸ்ரீ நாமகிரியம்மன், ஸ்ரீ நரசிம்மர். ஸ்ரீ திருவடி சுவர்ணதுவஜஸ்தம்பம், ஸ்ரீ ஆஞ்சநேயர் முதலிய கோயில்களை பன்னிருமுறை வலம் வந்து, நியமத்துடன் வணங்கி வந்தால் ஸ்ரீ நாமகிரி அம்மனின் அருளால் பேய், பிசாசு, பில்லிசூன்யம், ஏவல், தீராத நோய்கள், சந்ததியின்மை முதலிய குறைகள் நீங்கும். அவரவர் பக்தி சிரத்தைக்குத் தகுந்தபடி ஸ்ரீநாமகிரியம்மன் அருள் பாலிக்கிறாள்.

நாமக்கல் நகரில் நடுநாயகமாக விளங்கும் மலையான சாளக்கிராமத்தை நேபாள தேசத்திலிருந்து எடுத்து வந்து ஸ்ரீ நரசிம்ம மூர்த்தியின் திருஉளப்படி இந்நகரில் ஸ்தாபனம் செய்து ''ஸ்ரீ நாமகிரி'' நாமக்கல் என்னும் திருப்பெயரை நிலை நாட்டிய பெருமை ஸ்ரீ ஆஞ்சநேயரையே சார்ந்தது. அது முடியுமா என்ற நமது ஐயப்பாடு நீங்கவே அவர் இங்கே விஸ்வரூபத் திருக்கோலத்துடன் நிமிர்ந்து கை கூப்பி நிற்கிறார். மேலே விதானம் இன்றி திறந்த வெளியில் காற்று, மழை, வெய்யில் இவைகளை தாங்கிக் கொண்டு கம்பீரமாகத் தரிசனம் கொடுக்கிறார். இன்னமும் இவர் வளர்ந்து கொண்டிருப்பதால் இவருக்கு மேலே விமானம் கட்டப்படவில்லை. தவிரவும் லோகநாயகனான ஸ்ரீ நரசிம்மரே கிரி உருவில் மேல் விதானமின்றிருப்பதால் தாசனான தனக்கும்அது தேவையில்லை என்று முன்னோர்கள் விதானம் கட்ட முயற்சித்தபோது ஸ்ரீ ஆஞ்சநேயர் சொப்பனத்தில் அருளியதாகவும் சொல்லப்படுகிறது.

இத்தலத்திற்கு வரும் பக்தர்கள் மிகவும் பயபக்தியுடன் ஸ்ரீ ஆஞ்சநேயரிடம் தமது குறைகளை சமர்ப்பித்து தம்மால் செய்ய



முடியாத செயல்களையும் ஸ்ரீ ஆஞ்சநேயர் உதவியால் சாதித்துக்கொண்டு தங்களால் இயன்ற வழிபாடுகளை நிறைவேற்றுகிறார்கள்.

நவகிரகங்களில் குரூரமான சனி, ராகு, இவர்கள் பிரீதிக்காக விஸ்வரூப ஆஞ்சநேயருக்கு நல்லெண்ணையில் செய்த உளுந்த வடை மாலைகளைச் சாற்றியும் விசேஷ திரவியங்களால் அபிஷேகங்கள் செய்வித்தும் புஷ்பங்களாலும் வாசனை சந்தனத்தாலும் அலங்காரம் செய்தும் மகிழ்ந்து தங்கள் பிரார்த்தனைகளைச் செலுத்துகிறார்கள்.

ஸ்ரீ ஆஞ்சநேயரை வழிபட்டால் நற்புத்தி, சரீரபலம் கீர்த்தி அஞ்சாமை, பயமின்மை, நோயின்மை தளர்ச்சி இன்மை வாக்குசாதுர்யம் முதலிய நன்மைகள் ஏற்படும், பகவத் பஜனை, ஸ்ரீ ராமாயண சொற்பொழிவுகள் முதலிய நற்காரியங்கள் ஸ்ரீ ஆஞ்சநேயர் சன்னதியில் நிகழ்தல் வெகு சிறப்பாக ஆஞ்சநேயர் கிருபையால் அமைகின்றன.

ஒரே இடத்தில் பெருமாளை நின்ற, இருந்து, கிடந்த, நடந்து திருக்கோலங்களில் தரிசிக்கும் வாய்ப்பு இங்குள்ளதும் ஒரு சிறப்பாகும்.

**நரசிம்மர் பெருமை**

ஸ்ரீ நரசிம்மர் திருக்கோயில் ஊருக்கு நடுநாயகமாக விளங்கும் குன்றின் மேல் குடைவரைக் கோயிலாக அமைந்துள்ளது. இங்கு கோவில் கொண்டிருக்கும் ஸ்ரீ நரசிம்ம மூர்த்தி மேற்கு நோக்கியவாறு வீராஸனத்தில் வலது திருவடியை ஊன்றி, இடது திருவடியை மடித்து வீற்றிருக்கிறார். அருகில் பூஜித முனிவர்களான சநக சநந்தர்களும், கவரிவீசும் சூர்ய சந்திரர்களும் அடுத்து வலதுபுறம் உருத்திரரும் இடது புறம் நான்முகனும் (பிரம்மா) பகவான் இரணியனை வதைத்த உக்ரம் தணிவதற்கு வழிபடுகிறார்கள். ஸ்ரீ மகாலக்ஷ்மியின் தவத்தினால் மகிழ்ந்த ஸ்ரீநரசிம்மர் ஸ்ரீ லக்ஷ்மிநரசிம்மர் என்று பெயருடன் விளங்குகிறார். பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மூவரும் ஒரே ஆலயத்தில் பூஜிக்கப்படுவதால் இது திருமூர்த்தித் தலம் எனும் புகழுடையதாகவும் விளங்குகிறது.

பகவான் ஸ்ரீ நரசிம்மமூர்த்தியின் அபயமளிக்கும் வலதுகையில் இரணிய சம்ஹாரம் செய்த போது படிந்த

ரத்தக்கறையையும் நகங்களின் கூர்மையும் காணலாம். (கருவறை, அர்த்தமண்டபம் இவை குடவரையில் அமைந்துள்ளது இத்திருத்தலம் ஆதியில் தேவதச்சனால் உருவாக்கப்பட்டது. என்றும் பிற்காலத்தில் சிற்பக்கலையில் ஆர்வம் கொண்ட பல்லவ அரசர்களால் அழகுறப்புதுப்பிக்கப்பட்டது என்றும் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீ நரசிம்மரின் பெருமை கூறவொண்ணாதது. இந்த திருக்கோயில் அர்த்த மண்டபத்தில் குடவரையில் பக்கங்களில் ஸ்ரீ வைகுண்ட நாதர், ஹிரண்யசம்ஹார நரசிம்மர் (உக்ரநரசிம்மர்), மறுபுறம் வாமனமூர்த்தி, உலகளந்தப் பெருமாள், வராஹமூர்த்தி, முதலிய மூர்த்திகள் வெகு அழகாக சிற்பவடிவில் காட்சி கொடுக்கின்றனர். குடவரை வெகு அழகாகவும் நல்ல வேலைப்பாடுகளும், கொண்டு மேலே கொடுங்கை தூண்களுடன் அமையப் பெற்றிருக்கிறது. இக்குடவரையில் எழுந்தருளியிருக்கும் மூர்த்திகளுக்கு மூன்று காலங்களிலும் பூஜை நடத்து வருகிறது. அரசின் தொல்லியல் துறையால் பராமரிக்கப்படுகிறது. வைகானசஆகம விதிமுறைப்படி பூஜைகள் நடக்கின்றன.

**அரங்கநாதர் பெருமை**

மற்றோர் குடைவரையில் க்ஷீராப்திநாதர் சிங்கமுகம் கொண்ட மிக உக்ரமான கார்கோடகன் என்ற பாம்பணையில் ஸ்ரீ ரங்கநாதர் என்ற திருநாமத்தோடு யோகநித்திரை புரிகிறார். திருவடிபுறத்தில் தாமஸகுணம் படைத்த அரக்கர்களான மது, கைடபர் இருவரும் தீச்செயல் புரிய வந்து பகவத் குணவிசேஷத்தால் பக்தர்களாக மாறி பகவத் சரணாரவிந்தங்களில் மலர் வழிபாடு செய்கிறார்கள். உந்தியில் நான்முகனும், சங்கு, சக்கர, கதை, கத்தி, வில் முதலிய பஞ்சாயுதங்களும் மனித உருவுடனும், நாரதர் தும்புரு முதலிய முனிபுங்கவர்கள், சூரிய சந்திரர்கள் யாவரும் பகவானைத் துதிக்கிறார்கள்.

ஸ்ரீ நரசிம்மர் திருக்கோயிலில் அமைந்திருப்பது போல் இங்கும் சங்கர நாராயணனுக்கு எதிர்புறத்தில் வாமன திரிவிக்கிரம அவதார வடிவங்கள் சிற்ப வடிவில் அமைந்திருக்கின்றன. இக்குகையில் முக்கியவிடத்தில் பள்ளி கொண்ட பெருமாளும், பக்கங்களில் சங்கர நாராயணரும் வாமனரும்





திப்புசுல்தான் போன்ற ஆட்சியாளர்களுக்கு எதிரிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கும் கோட்டையாகவும் பயன்பட்டது.

கணித மாமேதை இராமானுஜன் வாழ்ந்த ஊர். நாமகிரித் தாயார் அவரது கனவில் தோன்றி கணக்குகள் பலவற்றையும் சொல்லிக் கொடுத்தாக அவரே கூறியுள்ளார். கர்நாடக இசைவித்வான் சேஷயங்கார், பக்திப் பாடகர் நரஹரி, தேசபக்திக்கவிஞர் இராமலிங்கம்பிள்ளை, திரைப்பட நடிகமணி மனோகர் போன்ற பல்துறை வித்தகர்கள் தோன்றிய பெருமை பெற்ற ஊராக நாமக்கல் திகழ்கிறது.


நாமக்கல் சிறந்த நகராட்சியாகும். இதே பெயருடன் விளங்கும் ஒரு மாவட்டத்தின் தலைமை நகராகவும் திகழ்கிறது. மாநிலத்தில் எல்லாப் பெரிய ஊர்களுக்கும் எந்த நேரமும் இங்கிருந்து பேருந்து வசதி உண்டு.

இவ்வாறு பலவிதங்களிலும் மேன்மைபெற்று விளங்கும் இத்தலத்தைக்காண வருக வருக என அழைக்கிறோம். வாரீர் வந்து பயன்பெறுவீர்.

எழுந்தருளியிருக்கிறார்கள். இந்த தலத்தில் கார்கோடகன் தவமியற்றி பகவானை மகிழ்வித்து அவருக்கு படுக்கையானான் என்பர் அவன் தினமும் கமலாலயத்திலிருந்து தீர்த்தம் கொண்டு வந்து ஸ்ரீ ரங்கநாதருக்கு பூஜை செய்கிறான் என்பதற்கு சான்றாக இன்னும் மலைப் பாதையில் குளத்திலிருந்து கோயில்வரை பாம்பு சென்ற வழி காணப்படுகிறது.

**நகரின் தனிச்சிறப்பு**

ஆரைக்கல், நாமகிரி (கிரி, மலை, பாறை) என வெவ்வேறு பெயர்களுடன் அழைக்கப்பட்டு வந்த இவ்வூர் இன்று நாமக்கல் என்ற பெயருடன் விளங்குகிறது. ஊரின் நடுவே ஒரே கல்லாலான உயர்ந்த பெரிய பாறை இவ்வூரை எளிதில் அடையாளம் காண உதவுகிறது. இப்பாறைமீது இராமநாயக்கன் என்ற பாளையக்காரனால் கட்டப்பட்ட மதிற்சுவர் கவர்ச்சிகரமான தோற்றம் தருவதுடன்



சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் : திருமிகு த. பிச்சாண்டி, இ.ஆ.ப., முதன்மை செயலர் / ஆணையர்
தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை, சென்னை - 600 034. தொலைபெசி : 28334811/12/13
ஆசிரியர் (கூ.பொ.) : ம. தேவேந்திரன், பி.எஸ்சி., பி.எல்., துணை ஆணையர்
அச்சிடுவோர் : குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை -21. தொலைபேசி : 25967929









பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் 2.9.2008 அன்று நடைபெற்ற தானியங்கி பஞ்சாமிர்த தயாரிப்பு நிலைய திறப்பு விழா, புதியதாக வடிவமைக்கப்பட்ட கம்பிவட ஊர்தி தொடக்க விழா மற்றும் பல்வேறு கட்டுமானப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டு விழாவில், மாண்புமிகு வருவாய்த்துறை மற்றும் வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. இ.பெரியசாமி அவர்கள், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள், தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலர் திரு. க. முத்துசாமி இ.ஆ.ப அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை முதன்மைச் செயலர் / ஆணையர் திரு. த. பிச்சாண்டி இ.ஆ.ப., அவர்கள், மற்றும் அறங்காவலர் குழுத் தலைவர் டாக்டர் ச.வே. பாலசுப்ரமணியம் அவர்கள் ஆகியோர் முன்னின்று நடத்தியும் கலந்து கொண்டும் சிறப்பித்தனர்.





பதிவு எண் : TN / PMG / (CCR) / 707 / 06-08 / WPP No. 451/06-08


# स्टेट बैंक ऑफ हैदराबाद
# State Bank of Hyderabad

Mylapore Branch
18/19, East Mada Street, Mylapore, Chennai - 600 004.
Phone : 24643576, 24616602
Email : mylapore@sbhyd.co.in

## ATTRACTIVE INTEREST ON DEPOSITS

| | |
|---|---|
| 1 Year less than 2 years | 10.25% |
| Above 15 lakhs | 10.35% |
| 2 Year less than 5 years | 10.00% |
| Above 15 lakhs | 10.10% |

*Senior Citizens 0.50% Extra*

NRE and FCNR Accounts — ATTRACTIVE RATES OF INTEREST INWARD REMITTANCE FACILITY TO REACH WITHIN A DAY

HOUSING LOANS

CAR LOANS

MORTGAGE LOANS

EDUCATION LOANS

## BUSINESS LOANS TO SUIT ALL SECTORS

SME ADVANCES

CORPORATE LOANS

*Quick Processing* *Attractive rates of interest* *No hassles*

We also offer TECHNICAL INITIATIVES like

- ATM CARD
- INTERNET BANKING
- ANYWHERE BANKING FACILITY
- MULTI CITY CHEQUES
- RTGs AND NEFT FACILITY
- PAYING OF UTILITY BILLS
- LIC PREMIUM THROUGH INTERNET
- BOOK YOUR TRAIN TICKET ONLINE

**All the above and more!!!!! Please contact us**
**VISIT US AT www.sbhyd.com**